Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION | MONEY SM TRANSFER | வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்
மூலம் 20 நிமிட நேரத்தில் உங்கள்
கைகளில் பணம்கிடைக்க எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 2223214
E-Mail: smskr@eureka.lk
சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 060 2212472
(சி-2015)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 08 (31.01.2004) சனிக்கிழமை இதழ் :122

# தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சிகள் குறித்து நோர்வே அமைச்சர்களுடன் தமிழ்ச்செல்வன் பேச்சு!



பீற்றர்சனுடன் தமிழ்ச்செல்வன்.

(ஒஸ்லோ)

**ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர், முதற்கட்டமாக நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் அந்நாட்டு"வெளிவிவகார அமைச்சரையும் அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.**

நேற்றுமுன்தினம் உள்ளூர் நேரப்படி காலை 10 மணிக்கு நடந்த இந்தச் சந்திப்பில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், மனிதாபிமான வெளிவிவகாரங்களுக்கான அதிகாரி ரைன் மோர்ச் ஸ்மித், சமாதானத்திற்கும் நட்புறவிற்குமான அதிகாரி எரிக் கிறெஸ்கி மற்றும் செல்வி ஹரிட் சொல்ஹெய்ம், பிப்பி சோஹாட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஹெல்கிசனுடன் தமிழ்ச்செல்வன்

## ஜெனரல் புறுவ்ஹொவ்டே நாளை பதவியேற்கிறார்!

(கொழும்பு)

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறுவ் ஹொவ்டே தனது கடமையைப் பொறுப்பேற்பதற்காக நேற்று கொழும்பு வருகிறார்.

இவர் நாளை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமையகத்தில் தனது பதவியைப் பொறுபபேற்றுக் கொள்வார் என கொழும்பிலுள்ள கண்காணிப்புககுழுத் தலைமையகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ தொழில்நுட்ப கூட்டு உடன்பாடு; ரஷ்யாவுடன் இலங்கை கைச்சாத்திட்டது!

(கொழும்பு)

ரஷ்யாவுடன் இராணுவத் தொழில்நுட்ப கூட்டு உடன்படிக்கை ஒன்றில் இலங்கை அரசாங்கம் கைச்சாத்திட்டது. பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை வலுப்படுத்தும் வகையிலேயே இந்த உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதரகம் வெளியிட்ட தகவலில்,

இந்த உடன்படிக்கை இருதரப்பு தொழில்நுட்ப கூட்டுறவை அபிவிருத்தி செய்தல், குறிப்பாக களத்திலுள்ள துருப்புக்களுக்கான ஆயுதங்கள், இராணுவத் தளபாடங்கள் மற்றும் விசேட கருவிகளை வழங்குதல், இராணுவத் துணைக்கருவிகள் மற்றும் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட இராணுவத் தளபாடங்களுக்கான உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் சேவைகளை வழங்குதல் போன்ற நோக்கங்களு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை முன்னாள் அதிகாரி சுட்டுக் கொல்லப்பட்டார்!

(கொழும்பு)

விமானப்படையின் முன்னாள் உயரதிகாரி ஒருவர் கொழும்பிலுள்ள அவரது வீட்டில் வைத்து நேற்றுமுன்தினம் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லபபட்டார்.

ஸ்குவாட்ரன் லீடர் ருக்மன் ஹேரத் என்ற விமானப்படையில் பணியாற்றிய அதிகாரியே கிருலப்பனையிலுள்ள அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

ஸ்குவாட்ரன் லீடர் ருக்மன் ஹேரத்தின் வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு பேர், அவர் மீது ரி - 56 ரக துப்பாக்கியால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டு; சந்திரிகாவின் சகோதரி எதிர்ப்பு!

(கொழும்பு)

சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கூட்டணி

நாட்டின் முன்னேற்றத்தை முதன்மையான நோக்கமாக கொள்ளாது ஆட்சியைக் கைப்பற்

## மன்னார் காட்டுப் பகுதியில் கண்ணிவெடிக்கு மூவர் பலி!

(மன்னார்)

மன்னார் சிலாவத்துறைக்கும், அநுராதபுரம்

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

# சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டு; சந்திரிகாவின் சகோதரி எதிர்ப்பு!

(கொழும்பு)

சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கூட்டணி ஒன்றை அமைப்பதில் பலரும் சுயநலத்துடனும் பதவி வெறியுடனும் நடந்துகொண்டதாக குற்றம் சாட்டியுள்ள ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரி சுனித்திரா பண்டாரநாயக்க, இந்தக் கூட்டணி விரைவில் தகர்ந்துவிடும் என்று ஆருடம் கூறியுள்ளார்.

தனது சகோதரியான ஜனாதிபதி சந்திரிகாவின் முழுமையான ஆசியைப் பெறாமல், அவசரமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தக் கூட்டணி, நாட்டின் முன்னேற்றத்தை முதன்மையான நோக்கமாக கொள்ளாது. ஆட்சியைக் கைப்பற்றவும் பதவியைப் பறித்து எடுக்கவுமே ஏற்படுத்தப்பட்டதாகவும், வெகுவிரைவில் இந்தக் கூட்டணி உடைந்து பல பக்கவிளைவுகளை ஏற்படுத்துமென்றும் கடுமையாகச் சாடினார்.

இத்தகைய அவசரக் கூட்டணியை அமைப்பதில் அதீத அக்கறை காட்டிய முன்னாள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, மங்கள சமரவீர, ஜனாதிபதியின் சகோதரரான அனுரா பண்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் காட்டுப் பகுதியில் கண்ணிவெடிக்கு மூவர் பலி!

(மன்னார்)

மன்னார் சிலாவத்துறைக்கும், அநுராதபுரம் வில்லாச்சி பகுதிக்குமிடையே, மரக்கறி மற்றும் கருவாடு வியாபாரம் செய்துவந்த மூன்று சிங்களவர்கள், கல்லாறு காட்டுப் பகுதியில் கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் அநுராதபுரத்தைச் சேர்ந்த டி.பி.அப்புகாமி (வயது 52), இவரது மகனான எரண்ட உதயகுமார (வயது 20), நிமல் முனசிங்க (வயது 38) ஆகிய மூவருமே பலியானவர்களாவர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 27 ஆம் திகதி அநுராபுரத்திலிருந்து சென்ற இவர்கள், மூன்று நாட்களாகியும் வீடு திரும்பவில்லை.

ஆனால், நேற்றுமுன்தினம் அநுராதபுரம் - மன்னார் காட்டுப்பகுதியில் மூன்று சடலங்கள் கிடப்பதாகத் தெரியவந்தது. இது முருங்கனிலிருந்து 40 கிலோமீற்றர் தூரமாகும். இதனையடுத்து, நேற்று சம்பவ இடத்திற்குச் சென்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

# திங்கட்கிழமை விடுமுறை தினம்

(யாழ்ப்பாணம்)

நாளைமறுதினம் திங்கட்கிழமை அரச பொதுவிடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது

நாளை மறுதினம் ஹஜ்பெருநாள் உலகெங்குமுள்ள முஸ்லிம் மக்களால் கொண்டாடப்படவுள்ளது. இதனை ஒட்டியே உலகெங்கும் இந்த நாள் விடுமுறை நாளாக அனுஷ்டிக்கப்படுகிறது.

அந்தவகையில் நாளைமறுதினம் திங்கட்கிழமையும் யாழ் மாவட்டத்தில் சகல அரச செயற்பாடுகளும் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அன்றைய தினத்தை அரசாங்க வங்கி, வர்த்தக விடுமுறைதினமாகவும் அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

# கச்சாய் இளைஞன் படுகொலைச் சம்பவம்; 7 ராணுவத்தினரும் வழக்கிலிருந்து விடுதலை!

(சாவகச்சேரி)

கச்சாய் பகுதியில் இளைஞன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு இராணுவ சிப்பாய்களையும் வழக்கிலிருந்து சாவகச்சேரி நீதிமன்றம் விடுவித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி கொடிகாமம் - கச்சாய் வீதியில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தவேளை அதே இடத்தை சேர்ந்த பரராஜசிங்கம் பரமேஸ்வரன் என்ற இளைஞன் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய கொடிகாமம் பொலிஸார், சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு அண்மையிலிருந்த இராணுவ முகாமைச் சேர்ந்த ஏழு இராணுவச் சிப்பாய்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். அவர்கள் நீதிமன்றத்தின் பணிப்பின் பேரில் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

குணதிலகா, காமினி, திலகரட்ண, வீரரத்ன, இந்திரபால, ரகநாயக்க, நிரஞ்சன் சாணுக ஆகிய ஏழு இராணுவச் சிப்பாய்களுமே தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட மேற்படி இராணுவச் சிப்பாய்களை சட்டமா அதிபரின் பணிப்பின் பேரில் தாம் விடுதலை செய்வதாக நீதிவான் பா.சுப்பிரமணியம் அறிவித்தார்.

மேற்படி இளைஞன் இராணுவ முகாம் அமைந்துள்ள பகுதிக்குள் அத்துமீறி நடமாடியதாகவும், தம்மீது குண்டுத்தாக்குதல் நடத்த முற்பட்டவேளை அவர்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இராணுவச் சிப்பாய்கள் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். எனினும் அவரது பெற்றோர்கள் அதனை முற்றாக மறுத்தமையும் குறிப்பிடத்தக்கது. (29,34,202)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 222389, 2226297

071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email :- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போஎயார்

வான் வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

your friend in the skies...

## பொதுக்கூட்டத்தை உடன் கூட்டுக

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல சனசமூக நிலையங்களையும் 2004 ஆம் ஆண்டுக்கான வருடாந்தப் பொதுக்கூட்டத் தினைக் கூட்டுமாறு அப்பகுதி சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி ப. யோகராஜா கேட்டுள்ளார்.கடந்த ஆண்டுக்கான நன்கொடையைப் பெற்றுக்கொள்வதற்காகவே இந்தக் கூட்டத்தினைக் கூட்டுமாறு அவர் கேட்டுள்ளார். கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்களை அந்தந்தப் பகுதி பிரதேசசபைகளுக்கும் அறிவிக்குமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

## பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

(மீசாலை)

மீசாலை கிழக்கு ஸ்ரீ விநாயகர் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் இன்று மாலை 4 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சனசமூக நிலையத் தலைவர் ந.அமலன் தெரிவித்துள்ளார்.

## அறிவுறுத்தல் கூட்டம்

தீவக கல்வி வலயத்தில் சேவை முன்பயிற்சி பெறாத சகல ஆசிரியர்களுக்குமான அறிவுறுத்தல் கூட்டம் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும் எனவும், இத்தகைய ஆசிரியர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## உத்தியோகத்தர்களுக்கான விசேட கருத்தரங்கு

பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கொன்று இன்று காலை 10 மணிக்கு யாழ்.செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகல பதவிநிலை உத்தியோகத்தர்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பி.எல்.பத்தினியம்மா கேட்டுள்ளார்.


### பாராட்டி வாழ்த்துகிறோம்



நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.த.க பாடசாலையின் பழைய மாணவியும், வட்டு. இந்துக் கல்லூரியின் மாணவியும், நெடுந்தீவு கனடா ஒன்றியத்தின் முன்னாள் ஆங்கில ஆசிரியரின் கனிஷ்ட புதல்வியுமான செல்வி. நாகசௌந்தரி மேரிதாசன் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

நாகம்ஸ் பாம்,
வட்டு.கிழக்கு,
வட்டுக்கோட்டை.

(சி/2193)

### திரைப்பட பிரதியாக்கம் தேவை

அண்மையில் தயாரிக்கப்படவிருக்கும் சின்னத்திரைக்கு தரமான கதைகள் தேவை. கதைகள் 40 பக்கங்கள் கொண்டதாகவும் (புல்ஸ்காப்தாள்), இந்த மண்ணின் சமுதாயப் பிரச்சினைகள் மற்றும் இந்த மண்ணிற்கு உயிர்ப்பூட்டும் கதைகளாக அமைதல் வேண்டும். கதைகளில் ஆபாசக்காதல் தவிர்க்கப்படல் வேண்டும். சிறந்த கதையாகத் தேர்ந்தெடுக்கும் கதைக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:- (611)

**FOCUS MULTI MEDIA,**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி (ஜெசித்தாரா கட்டிடம்)

### THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1இல் இருந்து 11 வரை எல்லாப் பாடங்களும்,
GRAMMAR, SPOKEN ENGLISH மேற்படிப்பு வரை

பதிவுக்கு:- அதிபர்
426 (302), K.K.S வீதி
யாழ்ப்பாணம். (588)

### யசோ இறபர் ஸ்டாம்

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

### ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

**ஜெய்**

காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம். (சி-2005)

### நிறைஞ்சனாஸ் சங்கானை

பிரசாந், கிரண் நடித்த

**வின்னர்**

காட்சி நேரம்:11.00, 2.45, 6.00, (பி.நே.)
ஞாயிறு இரவு 8.45 (பி.நே.)
**How To Lose A Guy In 10 Days** (சி-2004)

### eTouch COMPUTER SYSTEM

"The right way to touch IT"

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P. :- 0214 - 590222 E - mail :-etouch@wow.lk

மிகவும் குறைந்த கட்டணத்தில் வார, வார இறுதி, மாலைநேர (4.00 p.m to 7.00 p.m) வகுப்புக்கள் ஆரம்பம்.

| COURSE NAME | COURSE FEES | DURATION |
|---|---|---|
| Diploma in pc handling | FREE | 6 weeks |
| Diploma in Microsoft office | 1500/= | 3months |
| Diploma in Information Technology | 1500/= | 3months |
| Diploma in Multimedia | 2000/= | 3months |
| Diploma in Desktop publishing | 2000/= | 3months |
| Diploma in Engineering Drawing | 2000/= | 3months |
| Diploma in Computer programming | 2000/= | 4months |
| Diploma in Computer Hardware | 2500/= | 4months |
| Sri Lanka Computer Driving Licence | 3000/= | 4months |

**REGISTRATION FEES 1100/=**

- புதிதாக கணனி வாங்கிய ஒவ்வொருவரும் ஒரே மாதத்தில் கணனி பற்றி முழுமையாக அறிந்து கொள்ளும் Diploma in pc Handling (Online Class) பதிவுக் கட்டணம் மட்டுமே அறிவிடப்படும்!!!
- GIT பாடவிதானத்தை உள்ளடக்கி பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர (3.30 to 4.30) கற்கைநெறி - Diploma in Information Technology.
- இலங்கை அரசினால் நடத்தப்பெறும் கணனியில் தேசிய பயிற்சி சான்றிதழிற்கான (Sri Lanka Computer Driving Licence - SL CDL) வகுப்புக்கள்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 02.02.2004

Director

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P. :- 0214 - 590222 (610) E - mail :-etouch@wow.lk

### யாழ்.குடாநாட்டு மக்களுக்கோர் நற்செய்தி....!

புகழ்பெற்ற கொழும்பு அப்பலோ மருத்துவமனையினர்
தமது வைத்திய சேவையை குடாநாட்டில் இன்றைய தினத்தில்
அப்பலோ மருத்துவ மனையின் தகவல் நிலையமொன்றினை
திறந்து வைப்பதன் மூலம் ஆரம்பிக்கின்றனர் என்பதை அறியத்தருகின்றோம்.

Apollo Life



நிபுணத்துவமிக்க மருத்துவர்களின்
அர்ப்பணிப்புடன் கூடிய
ஆலோசனைகளும், சிகிச்சைகளும்
உங்கள் ஆரோக்கியமான
ஆயுளுக்கு உறுதுணையாகின்றன.

சகல நோய்களுக்கும்
மருத்துவ விஞ்ஞான
தொழில்நுட்பத்தை
பயன்படுத்தி சிகிச்சைகள்
வழங்கப்படுகின்றன...

மனித நேயத்துடன் கூடிய மருத்துவ சேவை
நோயற்ற வாழ்வை உங்களுக்கு
அளிக்கிறது...

APOLLO HOSPITALS
212, ஸ்ரான்லி வீதி – யாழ்ப்பாணம்.

அப்பலோ - நோயாளருக்கான உயிர்பாதுகாப்பு, வாழ்க்கை மேம்பாட்டு அமைப்பு

# மிக விரைவில் தேர்தலொன்று நடைபெறும் வாய்ப்புள்ளது

## ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் விரைவில் பொதுத்தேர்தல் ஒன்று நடத்தப்படும்மென, ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

ஜே.வி.பி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுத் தொடர்பாக, மக்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் நடந்த ஊர்வலத்தின் முடிவில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

தேர்தல் வந்தால், நாட்டின் வன்செயல்கள் அதிகரிக்கும் என்று மக்கள் அஞ்சத்தேவையில்லை. அத்துடன், ஜே.வி.பி - சுதந்திரக் கட்சி ஆகிய இரு கட்சிகளுக்குமிடையில் உருவாக்கப்பட்ட ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி கூட்டின் ஒவ்வொரு அடியும், அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசைத் தோற்கடித்து, நாட்டைப் பொருளாதார அரசியல் நெருக்கடி நிலையிலிருந்து காப்பதற்கேயாகும்.

கடந்த இரண்டு வருடங்களாக ஆட்சிசெய்யும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம்-நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் நலிவடையச் செய்துள்ளது. இந்த நிலையை நாம் தொடரவிட்டால், நாட்டின் பொருளாதாரம் அழிந்துவிடும். அத்துடன், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பிரிவினையை நோக்கியும் முன்னேறுமெனவும் தெரிவித்தார்.

ஜே.வி.பி. - சுதந்திரக் கட்சியின் கூட்டணி தொடர்பான ஆதரவுப் பேரணியில் - சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி, இலங்கை மக்கள் கட்சி, மகஜன எக்சத் பெரமுன, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி) ஆகியவற்றின் தலைவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

# அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளது!

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டிருப்பதாக, அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும்போதே, அமைச்சர் பீரிஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இதனடிப்படையில் பால்மா, கருவாடு, அரிசி, பருப்பு, ரின்மீன், உருளைக்கிழங்கு போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன.

பருப்பு ஒரு கிலோவின் விலை 2 ரூபாவினாலும், உருளைக்கிழங்கு ஒரு கிலோ 2 ரூபாவாலும், ரின்மீனின் விலை ஒரு ரூபாவாலும், பால்மா 450 கிராமின் விலை 5 ரூபாவாலும் குறைக்கப்பட்டுள்ளது.

வற் வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டதன் காரணத்தினாலேயே, இந்த அத்தியாவசியப் பொருட்களின் விலைக்குறைப்பு இடம்பெற்றிருப்பதாகவும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

உரமானியம் வழங்கப்படாததால், விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபடுகின்றார்கள். 450 ரூபா உரமானியம் ஏற்கனவே வழங்கப்பட்டது. தொடர்ந்தும் உரங்களின் விலையை 800 ரூபாவாகவே பேண அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

மின்சாரத்தை பொறுத்தவரையில் 400 அலகுக்கு மேலதிகமாகப் பாவிக்கும் மின் பாவனையாளர் ஒருவருக்கு மேலதிக கட்டணமாக ஒரு ரூபாவை அறிவிடவும், வர்த்தக நிறுவனங்கள் ஆயிரம் அலகுகளை மேலதிகமாகப் பாவிக்கும்போது 2 ரூபாவினை அறவிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நீருக்கு முழுமையாக வற் வரி அறவிடப்படமாட்டாது எனவும் பீரிஸ் தெரிவித்தார்.

இவையாவும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் அறிமுகம் செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (01)

## சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டு

# கொள்கைகள் மாறுபட்டிருந்தாலும் ஜனநாயகத்துக்கு கிடைத்த பெருவெற்றி

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் கூட்டமைப்பு, ஜனநாயகத்துக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய வெற்றியாகும் என்று - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது கூட்டத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா அனுப்பிவைத்த செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

ஜனாதிபதி சந்திரிகா தனது செய்தியில் மேலும் தெரிவித்ததாவது -

இரண்டு கட்சிகளும் மாறுபட்ட கொள்கைகளையும், போக்குகளையும கொண்டிருந்தால் கூட, இந்தக் கூட்டமைப்பு நாட்டின் வளர்ச்சிக்கு வழிசமைக்கும்.

இடதுசாரி அமைப்புக்கும் இது மேன்மையை கொடுத்திருக்கிறது. நாட்டு மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு அனைத்து மக்களும் இந்தக் கூட்டமைப்பை அர்ப்பணிப்போடு ஆதரிக்கவேண்டும்.

மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், இந்த இரு கட்சிகளும் முக்கியமான பல விடயங்களில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தி உள்ளன நாட்டுக்கான நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதற்கு இந்தக் கூட்டமைப்பு உறுதிபூண்டிருக்கிறது.

பொருளாதார அபிவிருத்திக்கும், சமூக நீதிக்குமான இரண்டு செயல்திட்டத்தை மேற்கொள்ள இரு கட்சிகளும் இணங்கியிருக்கின்றன.

நாட்டின் பிரதானமான சரித்திர காலகட்டம் என்பதால், சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடதுசாரி அமைப்புக்களோடு இணைந்து கொண்டுள்ளன.

நாட்டின் நன்மைக்காகவும், பின்தள்ளப்பட்ட சமூகங்களுக்காவும், 1965, 1968, 1994 ஆம் ஆண்டுகளில் இத்தகைய கூட்டமைப்புதான் ,ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று அவர் அனுப்பிய செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டணி உருவான பின்னர் நடைபெற்ற முதலாவது பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட பௌத்த பிக்குகளை படத்தில் காணலாம்.

# புதிய கூட்டணிக்கு கம்யூனிஸ்ட் ஆதரவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் செய்துகொண்டுள்ள கூட்டமைப்புக்கு, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வெளியில் இருந்து ஆதரவளிக்கவுள்ளது

இது தொடர்பாக கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜனநாயக ரீதியான கட்சி என்ற அடிப்படையில் அதனை முன்னெடுப்பதற்காக ஆதரவளிக்கும் வகையிலே இந்த ஆதரவை வழங்க முன் வந்துள்ளதாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது. (01)

# வங்கிக் கொள்ளைக்கு புலிகள் திட்டமாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் - கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வங்கிக் கொள்ளைகளில் ஈடுபடத் திட்டம் வகுத்திருப்பதாக, சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்கள், தம்மை விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என அடையாளம் காட்டிக்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்டவர்கள் வங்கிக் கொள்ளைகளுக்காகவே கொழும்பு வந்தார்கள் எனவும், கிளிநொச்சியில் இருந்து தகவல் கிடைக்கும்வரை அவர்கள் காத்திருந்ததாகவும், குறிப்பிட்ட சிங்கள இதழ் பொலிஸாரினை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது. (01)

# பறவைக் காய்ச்சல் நோய் இலங்கையில் பரவும் ஆபத்து!

(கொழும்பு)

இலங்கையிலும் பறவைக் காய்ச்சல் நோய் பரவக்கூடிய அபாயம நிலவுவதாக, சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது, ஆசிய நாடுகளில் பரவிவருகின்ற பறவைக் காய்ச்சல், இலங்கையிலும் பரவக்கூடிய அபாயம் இருக்கின்றபோதும், தற்போதைக்கு அந்த நிலை தோன்றவில்லை என டொக்டர் நிகல் அபேசிங்க தெரிவித்தார்.

எனினும், வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு பறந்து வரும் பறவைகளில் இருந்து இந்த நோய பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# விவசாயிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

விவசாயிகளுக்கு உரிய சலுகைகள் அளிக்கப்படவில்லை என்பதைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

பொலநறுவை, அம்பாந்தோட்டை, பதுளை போன்ற இடங்களில் இந்தப் போராட்டம் தற்போது நடைபெற்றுவருகின்றது. இந்தப் போராட்டம் மேலும், விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே, உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிடலாம் என்றும், அவ்வாறு இல்லையேல் இது சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டமாக அமையும் என விவசாயிகள் தெரிவித்தனர். (01)

# சகல தரப்பினருடனும் பேசுவதன் மூலமே வட, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாணலாம்

## தேசிய ஐக்கிய முன்னணி அறிக்கை

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றால், பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள சகல தரப்பினரின் பங்களிப்புடன் பேச்சு வார்த்தையை நடத்தினால், தீர்வு காணமுடியும் என தேசிய ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் இணைந்து விடுத்துள்ள கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை இரண்டு கட்சிகளும் சந்திப்பு ஒன்றை நடத்திய பின், கூட்டறிக்கையொன்றினை வெளியிட்டனர். அந்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அறிக்கையில் தொடர்ந்து தெரிவிக்கப்பட்டதாவது-

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் பிரச்சினை தொடர்பாக கவனம் செலுத்தப்படவேண்டும். குறிப்பாக, கிழக்கில் உள்ள சிங்கள, முஸ்லிம் மக்களின் பிரச்சினை தொடர்பாக விசேடகவனம் செலுத்தப்படவேண்டும். இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் நிலை தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட வடக்கு - கிழக்கில் உள்ள சமூக, பொருளாதார, அரசியல் தொடர்பான நிர்வாக சிக்கல் தொடர்பாகவும், விரிவாகக் கலந்துரையாடப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அதிபர், நிர்வாக அதிகாரியின் தகைமைகள் பரிசீலனை

தேசிய பாடசாலை அதிபர் மற்றும் நிர்வாக அதிகாரிகள் ஆகியோரின் கல்வித் தகமைகள் பரிசீலனைக்குட்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான ஆலோசனையை கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்குக்கு கல்வி அமைச்சின் செயலாளர் விடுத்துள்ளார். அண்மையில் கல்வி அமைச்சின் கையொப்பத்துடன் கூடிய போலிச் சான்றிதழ் ஒன்று, அதிபர் நியமனத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது. இதன் எதிர் செயற்பாடாகவே அதிபர், நிர்வாக அதிகாரிகளின் தகமைகள் பரிசீலிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (01)

# வடக்கு - கிழக்கு பகுதிகளில் பணியாற்ற அரச வைத்தியர்களுக்கு பற்றாக்குறை!

(கொழும்பு)

வடக்ந - கிழக்கு பகுதிகளில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்கு, அனுபவம் வாய்ந்த மருத்துவ அதிகாரிகளுட துணை மருத்துவ அலுவலர்களும் பற்றாக்குறையாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த சுகாதார அதிகாரிகள், இதற்கு காரணம் அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யாமையும், தேவையான துண மருத்துவ அலுவலர்களுக்கு பயிற்சியளித்த வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு நியமிக்காமையும் ஆகும்.

இதேவேளை, மாகாண சுகாதார அமைச்சே துணை மருநுவ அலுவலகர்களையும், மருத்துவர்களையுந்தமது மாகாணங்களில் உள்ள வைத்தியசாலகளில் நியமிக்கவேண்டும். இதற்கென "நீரப்" திட்டத்தின் மூலம் உலகவங்கி இரண்டு மிலியன் ரூபாவை வழங்கியுள்ளது.

தனியார் மருந்தகங்கள் மிகத் திறமையாக மருந்தாளர்கள வைத்திருப்பதனால், இந்தப் பற்றாக்குறைன நீக்கமுடியாதுள்ளது. இருந்தபோதிலும், மூநூறுக்கும் மேற்பட்ட மருந்தகங்களில் எழுத்தைந்து வீதத்திற்கு மேற்பட்ட மருந்தாளர்கள் எதுவித தகுதியும் இல்லாமல் உள்ளதாக, மாகாண நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் ப.மகேஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன், இந்த மருந்தாளர்கள் பயிற்சிக்கு, மாவட்ட ரீதியில் நூறு இளைஞர்களைத் தகுதி அடிப்படையில் தேர்வுசெய்து, அவர்களுக்கு இரண்டு வருட பயிற்சியும் வழங்கவேண்டும். அதன் பின்னர் இலங்கை மருத்துவ குழுவினால் நடத்தப்படும் மருந்தாளர்களுக்கான பரீட்சையை அவர்கள் எதிர்கொள்ள வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கையில் அடுத்த இரண்டு வருடங்களுக்குள், வடக்கு - கிழக்கில் இயங்கும் தனியார் மருந்தகங்களில் தகுதி இல்லாமல் செயற்படும் மருந்தாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் - சரியான ஒதுக்கீடு இல்லாததனால், வடக்கு கிழக்கிலுள்ள அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகளில் அத்தியாவசியமான 48 மருந்துவகைகள் வழங்கப்படுவதில்லை எனத் தெரிவித்தனர்.

# முத்தரப்பு கிரிக்கெட் இறுதிப் போட்டி அணியிலிருந்து பெவன் நீக்கம்!



(மெல்பேர்ன்)

முத்தரப்பு கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்தியா - அவுஸ்ரேலியா அணிகள் எதிர்வரும் 6 ஆம் திகதி முதல் மோதுகின்றன.

இறுதிப் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் இருந்து முன்னணி ஆட்டக்காரர் மைக்கல் பெவன் காயம் காரணமாக நீக்கப்பட்டுள்ளார்.

பயிற்சியின்போது இடுப்பு வலியால் அவதிப்பட்ட பெவன், நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் சிம்பாப்வேக்கு எதிராக 56 ஓட்டங்களைக் குவித்தார்.

அப்போது அவருக்கு மேலும் வலி அதிகமானது. எக்ஸ்ரே பரிசோதனையில் பெவனுக்கு இடுப்பு எலும்பில் லேசான கீறல் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, 6 வாரம் அவர் ஓய்வெடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை - நாளை இந்தியாவுக்கு எதிராக நடக்கவுள்ள லீக் போட்டியில் அவுஸ்ரேலிய அணித் தலைவவர் பொண்டிங் களம் இறங்க வில்லை. அவருக்கு பதிலாக விக்கெட் காப்பாளர் கில் கிறிஸ்ட் அணியை வழிநடத்தவுள் ளதாக அறிவிக்கப்பட்டது.

இறுதிப் போட்டிக்கு முன்னதாக பொண்டிங் அணிக்கு திரும்பிவிடுவார் என்று கூறப்பட்டுள்ளது. இந்திய வீரர்கள் டெண்டுல்கர், ஷெவாக் ஆகியோரும் காயம் காரணமாக ஓய்வெடுத்து வருகின்றனர். இவர்கள் இருவரும் இறுதிப் போட்டியில் நிச்சயம் ஆடுவார்கள் என்று இந்திய அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சுழல் பந்து வீச்சாளர் கும்ளே தொடர்ந்து காயத்தால் அவதிப்பட்டு வருவதால் அவர் அணிக்கு திரும்புவது கேள்விக்குறியாகவுள்ளது என்றும் கூறப்படுகிறது.



சாதனையை எட்டிவிட்ட மகிழ்ச்சியில் தனது அணி வீரர்களுடன் பொலக்.

# கிரிக்கெட் தரவரிசையில் அவுஸ்ரேலியா முதலிடம்!

(சென்னை)

சாம்சங் நிறுவனம் கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தத் தரவரிசையில் ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலியா 81 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தில் உள்ளது.

இந்தியா 70 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்திலும், தென்னாபிரிக்க 66 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 61 புள்ளிகள் பெற்று 4 ஆவது இடத்திலும் உள்ளன. இங்கிலாந்து 5 ஆவது இடத்திலும், நியூசிலாந்து 6 ஆவது இடத்திலும், இலங்கை 7 ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 ஆவது இடத்திலும், சிம்பாப்வே 9 ஆவது இடத்திலும், கென்யா 10 ஆவது இடத்திலும், பங்களாதேஷ் கடைசி இடத்திலும் உள்ளன.

டெஸ்ட் போட்டியில் இந்தியா 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. அவுஸ்ரேலியா 74 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்திலும், தென்னாபிரிக்கா 2 ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 3 ஆவது இடத்திலும், இங்கிலாந்து 4 ஆவது இடத்திலும் உள்ளன. மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து, இலங்கை, சிம்பாப்வே, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் முறையே 6 முதல் 10 ஆவது இடங்களில் உள்ளன.

# தென்னாபிரிக்க வீரர் பொலக் கிரிக்கெட்டில் புதிய சாதனை!

மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியின் போது பொலக் புதிய சாதனை ஒன்றை படைத்தார். தென்னாபிரிக்க அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் ஒரு நாள் போட்டியில் மோதி வருகிறது. முதல் இரண்டு போட்டிகளிலும் தென்னாபிரிக்கா எளிதில் வெற்றிபெற்று முன்னணி வகிக்கிறது.

நடந்து முடிந்த இரண்டாவது ஆட்டத்தின் போது, பொலக் சாதனைப் பட்டியலில் சேர்ந்தார். ஒருநாள் கிரிக்கெட்டில் 2000 ஆயிரம் ஓட்டங்கள் மற்றும் 250 விக்கெட்டுக்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் பொலக் 4 ஆவது இடத்தை எட்டினார்.

ஆனால், மிகக் குறைந்த போட்டிகளில் இந்த சாதனையை எட்டியதில் பொலக்குக்கு முதலிடம் கிடைத்தது. பொலக் 205 ஒருநாள் போட்டிகளில் 2018 ஓட்டங்களையும் 292 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியுள்ளார்.

முன்னதாக கபில்தேவ் (இந்தியா), வசீம் அக்ரம் (பாகிஸ் தான்) மற்றும் ஜெயசூரிய (இலங்கை) ஆகிய வீரர்கள் இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளனர்.

ஆயிரம் ஓட்ட்ங்கள் மற்றும் 100 விக்கெட்டுக்களை மிகக் குறைந்த போட்டிகளில் பெற்ற வீரர் என்ற சாதனையும் பொலக் வசமே இருக்கிறது.

இந்தியாவின் முன்னாள் கப்டன் கபில்தேவ் 218 போட்டிகளில் 3746 ஓட்டங்களையும் 209 விக்கெட்டுக்களையும் பெற்றிருந்தார்.

## வை.எம்.சி.ஏ. நடத்தும் மேசைப்பந்தாட்ட போட்டி!

வை.எம்.சீ.ஏ. நடத்தும் வருடாந்த உள்ளக விளையாட்டுப் போட்டிகளில் 2003 - 2004 ஆம் ஆண்டுக்கான மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நேற்றுமுன்தினம் வை.எம்.சீ.ஏ. உள்ளரங்கத்தில் இடம்பெற்றது.

திறந்த போட்டிகளில் ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் அரையிறுதியில் ஜெ.மோகன் தன்னை எதிர்த்தாடிய இ.சுகந்தனை 11 - 04, 11 - 05, 07-11, 11 - 06 என்ற செட் வெற்றி அடிப்படையில் இறுதிப் போட்டிக்குத் தெரிவானார்.

மற்றைய அரைஇறுதியில் பா.ஜெயதாஸன் தன்னை எதிர்த்தாடிய ஆர்.கிருஷாந்தனை 11 - 07, 11 - 04, 11 - 05, என்ற நேர் செட்களில் வெற்றிகொண்டு இறுதிப் போட்டிக்கு தெரிவானார்.

ஆண்கள் இரட்டையர் போட்டியில் ஜெயதாஸன் - சுகந்தன் அணியினர், தம்மை எதிர்த்தாடிய கிரிஷாந்தன் - அருள் சோடிகளின் 07 - 11, 11 - 06, 11 - 04, 09 - 11, 11 - 07 என்ற செட் அடிப்படையில் கடும் போட்டிகளின் பின்பு சம்பியன் கிண்ணத்தை தட்டிச் சென்றனர்.

ஆண்கள் ஒற்றையர், பெண்கள் ஒற்றையர் போட்டிகள் - இறுதிநாள் நிகழ்வில் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (205)

## யாழ்.மத்திய கல்லூரியின் படகோட்ட, நீச்சல் போட்டி முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மத்திய கல்லூரியின் வருடாந்த மெய்வல்லுனர் போட்டியின் முதல் நிகழ்வான படகோட்டம் மற்றும் நீச்சல் போட்டிகள் நேற்று சாட்டி கடற்பகுதியில் நடைபெற்றன.

முதலில் நடந்த படகோட்டப் போட்டியில் பேசிவல் இல்லம் முதலாம் இடத்தையும், ஜேம்ஸ் லீஞ்ச் இல்லம் இரண்டாம் இடத்தையும், புல்லோ இல்லம் மூன்றாம் இடத்தையும், றொமேன் இல்லம் நான்காம் இடத்தையும் பில்க்ஸ் இல்லம் ஐந்தாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

நீச்சற் போட்டியில் 55 மாணவர்கள் பங்குபற்றினர்.

இதில் பேசிவல் இல்லத்தைச் சேர்ந்த எஸ்.தர்மராஜா முதலாமிடத்தையும், பில்க்ஸ் இல்லத்தைச் சேர்ந்த எஸ்.நிமலகாந்தன் இரண்டாம் இடத்தையும், புல்லோ இல்லத்தைச் சேர்ந்த எ.அபிலாஷ் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

நீச்சற் போட்டியில் கலந்து கொண்ட 55 மாணவர்களில் 45 பேர்முழுமையாக நீந்திக் கரை சேர்ந்தனர்.

# விளையாட்டு

## சென்.அன்ரனிஸ் கழகத்துக்கு 3 ஆண்டுகள் விளையாடத் தடை!

### யாழ். உதைபந்தாட்ட லீக் அறிக்கை

( கொக்குவில் )

பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும், வீரர்களும் மூன்றாண்டுகளுக்கு உதைபந்தாட்டம் விளையாடுதல், நிர்வகித்தல் என்பவற்றில் இருந்து தடைசெய்யப்பட்டிருப்பதாக யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் அறிவித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற நொக் அவுட் அரையிறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகத்திற்கு எதிராக பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் பங்குகொண்ட நிகழ்வின்போது மத்தியஸ்தர் தாக்கப்பட்டது தொடர்பாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இது சம்பந்தமாக கடந்த 25 ஆம் திகதி கூடிய யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் கூட்டத்திலேயே தடை உத்தரவுக்கான முடிவு மேற்கொள்ளப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

இதன்படி 25-01-2007 ஆம் ஆண்டு வரையான மூன்றாண்டுகள் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தின் வீரர்கள் போட்டிகள் நடத்தீவோ, பங்குபற்றவோ அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாகவும் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பாசையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டு வீரர்களான சுமித், ஜோன் சன் ஆகியோருக்கு 25-01-2009 வரையான 5 வருடங்கள், கோபேட் என்பவருக்கு 25-01-2007 வரையான மூன்று வருடங்களும் விளையாட அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாகவும் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் செயலாளர் மு.பிரான்சிஸ் அனுப்பி வைத்துள்ள கடிதங்களில் சகல விளையாட்டுக் கழகங்களுக்கும் தெரிவித்துள்ளார். (206)

## மெமோறியல் இல்லமெய்வல்லுநர் போட்டி: சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம்; மானிப்பாயில் இன்று நடைபெறும்!

(சுதுமலை)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெயவல்லுநர் போட்டியை முன்னிட்டு இடம்பெறுவரும் விளையாட்டுப் போட்டிகளில், ஆண்களுக்கான சைக்கிள், மரதன் ஓட்டப்போட்டியும் பெண்களுக்கான சைக்கிள், மரதன் ஓடப்போட்டியும் இடம்பெறவுள்ளன.

இன்று ஆண்களுக்கான சக்கிள் ஓட்டப் போட்டியும் (15 கிலோமீற்றர் பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியும் இடம்பெறவுள்ளன.

சைக்கிள் ஓட்டப்போட்ட மானிப்பாய் - ஆனைக்கோட்டை சங்கரத்தை - வட்டுக்கோட்டை ஓட்டுமடம் ஆகிய பகுதி ஊடாகச் சென்று மானிப்பாயில் முடிவடையும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியும் (நாலரை கிலோமீற்றர்), ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியும் இடம் பெறவுள்ளது.

வருடாந்தம் இடம்பெறும் இப்போட்டி நிகழ்வின் பெருமளவான மாணவர்கள் பங்குகொள்வதாக பாடசாலை அதிபர் அ.மு.அருணாச்சலம் தெரிவித்தார். (91)

## இந்திய அணியில் மீண்டும் இடம்பெறுவேன் என்கிறார் ஜடேஜா!

இந்திய அணியில் சிறந்த துடுப்பாட்ட வீரராகத் திகழ்ந்தவர் அஜய் ஜடேஜா. சூதாட்டத்தில் ஈடுபட்டதால் இந்திய கிரிக்கெட் சபை இவரை சர்வதேசப் போட்டிகளில் விளையாடத் தடை விதித்தது. இதனால் இவர் உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி வருகிறார்.

இந்த நிலையில் ஜடேஜா தான் சிறப்பாக விளையாடி இந்திய அணியில் இடம்பெறுவேன் எனவும், அதுவும் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் இடம்பெற நான் கடுமையாக முயற்சிப்பேன் எனவும் கூறியுள்ளார்.

இப்போது கங்கூலி தலைமையிலான இந்திய அணி சிறப்பாக விளையாடி வருகிறது. அவர் கப்டன் பணியை சிறப்பாகச் செய்து வருகிறார் என்றும், தற்போது இந்திய அணியில் இளம் வீரர்கள் விளையாடுவது இந்திய அணிக்கு பலம் சேர்த்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

## கன்னியர் மடம் பாடசாலையில் மேசைப்பந்தாட்டப் போட்டி!

யாழ்ப்பாண திருக்குடும்ப கன்னியர்மடம் பெண்கள் கல்லூரியின் 2004 ஆம் ஆண்டுக்கான இல்லங்களுக்கான விளையாட்டுப் போட்டியின் குழு நிகழ்வொன்றில் மேசைப் பந்தாட்டப் போட்டிகள் இடம்பெற்றன.

கல்லூரி உள்ளரங்கில் இடம்பெற்ற போட்டியில் மாட்டினா, கிளேரா, ஜோசப்பினி, விகிர்ரேசன், தெராசா ஆகிய 5 இல்ல வீராங்கனைகள் மோதினர்.

இதில்' இறுதிப் போட்டியில் கிளேரா, தெராசா அணிகள் மோதின. இதில் கிளேரா அணி வெற்றிபெற்று சம்பியனாக தெரிவாகியது. (205)

## இந்திய கிரிக்கெட் அதிகாரி பாகிஸ்தான் செல்கின்றார்

இந்திய கிரிக்கெட் அணி மார்ச் மாதத்தில் பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து விளையாடவுள்ளது. இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் சபையின் இணைசெயலாளர் ஆர்.எஸ். ஷெட்டி மற்றும் உள்துறை உயர் அதிகாரிகள் அடுத்த வாரம் பாகிஸ்தான் செல்கின்றனர்

இந்திய அணிக்கு பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் அளிக்க வேண்டிய பாதுகாப்பு குறித்து அவர்கள் அந்த நாட்டு அரசு மற்றும் கிரிக்கெட் சபையுடன் ஆலோசனை நடத்தவுள்ளனர்.

# அவன் செய்த உதவி

வரிசையாக மாட்டப்பட்டிருந்த படங்களைப் பார்த்துக்கொண்டே வந்த கந்தசாமி - அந்தப் பையனின் நிழல் படத்தை பார்த்ததும் திடுக்கிட்டார். அந்தப் பளீரென்ற கண்களை அவரால் இன்னும் மறகக முடியவில்லை. இந்தப் பையன் இங்கே எங்கே வந்தான்.

சுற்றும் முற்றும் பார்த்தார். முதலாளியின் மேசையில் ஒரு புத்தகத்தினை வைப்பதற்கு ஊழியர் ஒருவர் வந்துகொண்டிருப்பது தெரிந்தது.

" என்னப்பா, இந்த போட்டோவில் இருப்பது யார்?

இது எங்களின் முதலாளி படம். சின்னப் பையனாக இருந்த பொழுது எடுத்தது. பத்து வருடங்களுக்கு முன்னாலே யாழ்ப்பாணத்தில் உயர்தரம் படித்து முடித்தவர். முதலிலே ஏழையாக இருந்து பின் படிப்படியாக கஷ்ரப்பட்டு முன்னுக்கு வந்தவர்.

யாழ்ப்பாணம்! நான் நினைத்தது சரிதான். அந்தச் சம்பவம் இப்பொழுதுதான் நடந்ததுபோல கந்தசாமிக்கு நினைவில் வந்தது.

இத்தனை வருடங்களில் தன்னை மறந்து விட்டிருப்பானோ? அல்லது நினைவில் வைத்திருப்பானோ? நினைவில் வைத்திருந்தால், இவன் எங்கே பள்ளிக்கு நன்கொடை கொடுக்கப்போகிறான்?



## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்கு பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப்பூர்த்தி செய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

மாத இறுதியில் தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்கு பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :..............................

கற்கும் பாடசாலை :..............................

கற்கும் தரம் :..............................

வீட்டு முகவரி :..............................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,காவலர் வீதி, யாழ்ப்பாணம்.



# சிறுவர் அரங்கம்



சிந்தனைக்கு!
நேரத்தைத் தள்ளிப்போடாதே, தாமதங்கள் அபாயகரமான முடிவைக் கொண்டவை

அன்புச் சிறுவர்களே!

சிறுவர்களே நீங்கள் எறும்பினைப் பார்த்திருக்கின்றீர்களா? அது எவ்வளவு சுறுசுறுப்பான பிராணி என்று தெரிந்திருப்பீர்கள். இந்த எறும்புகள் சுறுசுறுப்பில் மட்டுமல்ல, ஒழுங்கிலும் நேர்த்தியானவைதான். ஒன்றிலிருந்து ஒன்று பிரியாமல், ஒன்றன்பின் ஒன்றாகக் குழுமமாக, நோக்க ஒரு இடத்தைச் சென்றடைவதனைப் பார்த்தீர்களா?

சிறுவர்களே இவை ஒற்றுமையிலும் பலமானவைதான். அவை அவை தங்கள் புற்றுகளில் ஒன்றாகவே உணவைச் சேகரித்து வைத்துக் கொண்டு, ஒன்றாகவே சாப்பிடுவதையும் கவனித்துப் பார்த்தீர்களா. காக்கைகள்போல் ஒற்றுமைக்கும், சுறுசுறுப்பிற்கும், ஒழுங்கிற்கும் இந்த எறும்புகளும் ஒரு எடுத்துக்காட்டுதான். எனவே, சிறுவர்களே நீங்கள் பாடசாலைகளிலும்சரி, வீட்டிலும்சரி, எங்கேயும் ஒழுங்கைக் கடைப்பிடியுங்கள். ஒழுங்குடன், ஒற்றுமையும், கூடவாழும் தன்மையும் உங்களிடம் இருக்குமாயின், வருங்காலம் நாட்டில் பிளவுகள் ஏற்பட நியாயமில்லை.

பாசமுடன் -சாரு அக்கா

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

# மொங்கோலியா

| | |
|---|---|
| மக்கள் தொகை | - 26 மில்லியன் |
| தலைநகர் | - உலான் பாரர் |
| மக்கள் இனங்கள் | - காக் மோன் கோல்ஸ், கசாக்ஸ், சைனீஸ், ரஷ்யன் |
| மதம் | - திபேத்தன், பௌத்தம், இஸ்லாம், சமணீசம் |
| பணம் | - ரக்றுக் |
| தொழில்கள் | - செப்பு, ரோம் பதனிடல் |

மொங்கோலியா - ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் இடையில் அமைந்துள்ள ஒரு நாடாகும். 50 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்ததற்கான ஆதாரங்களை




தொல்பொருளாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த நாட்டில் அமைந்துள்ள கோபி பாலைவனத்தில் இதற்கான ஆதாரங்களைக் கண்டுபிடித்துள்ளனர். மொங்கோல் என்ற பதம் சீனாவில் ராஜ மன்னராட்சிக் காலத்திலும் பாவிக்கப்பட்டன.

மொங்கோலிய மக்கள் - நாடோடிகளாக வாழ்ந்தார்கள். விசித்திரமான வாழ்க்கை அமைப்புக்களைக்கொண்டிருந்தனர். இதுபோல நாடோடிகளாகத் திரிந்த மொங்கோலிய இனங்களை, ரெமுஜின் என்பவர் ஒன்றிணைத்தார். பின்னர் இவர் ஜென்ஜிஸ் கான் என அழைக்கப்பட்டார்.

மொங்கோலிய ராஜதானி (சாம்ராஜ்ஜியம்) மிகப்பெரியது. ஒரு காலத்தில் பெய்ஜிங்கிலிருந்து கஸ்பியன் கடல்வரை பரந்திருந்தது. பின்னர் பெய்ஜிங்கிலிருந்து விரட்டப்பட்டனர். ஜென்ஜிஸ் கானின் பேரப்பிள்ளை சீனாவின் யுவான் ஆட்சிக் காலத்தில் சக்கரவர்த்தியாக ஆட்சிபுரிந்தான். யுவான் ஆட்சி அதிகாரம் கொரியா, காகேசி முதலிய நாடுகளிலிருந்து வியட்நாம் வரை நீடித்திருந்தது. ரஷ்யாவும், சீனாவும் மொங்கோலியா மீது நாட்டம் கொண்டிருந்தன. 1920 ஆம் ஆண்டு ஸ்ராலின் - ரஷ்யாவில் பதவியேற்றதும், மொங்கோலியாவின் மடாலயங்களின்மீது தாக்குதல் நடத்தி, அதிகாரிகளை மதத்தலைவர்களைக் கொன்றார். பிரசித்திபெற்ற இடங்களில், மொங்கோலியர்கள் சுதந்திரம் பெற்ற சுக்பாறர் மிகவும் புகழ்பெற்றது. மொங்கோலியாவில் பௌத்த ஆலயங்கள் அதிகம் இருந்தாலும், மூன்று ஆலயங்கள் மிகவும் புகழ்பெற்றவை. இவை புத்தரின் வாழ்வின் மூன்று நிலைகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன. புத்தர் சிறுவனாக இருந்த போது காணப்பட்டநிலையை வெளிப்படுத்தும் சிலைகளும் இங்கு காணப்படுகின்றன. கோபி பாலைவனத்தில் காணப்பட்ட 2 டைனோசர்களின் எலும்புக்கூடு மிகவும் புகழ்பெற்றது.

# பொது அறிவு

1. உலகில் முதல் முதலில் தேசியக்கொடியேற்றிய நாடு எது? - டென்மார்க்
2. சர்வதேச தொழிலாளர் நிறுவனம் எங்குள்ளது? - ஜெனீவா
3. இலங்கையின் தேசிய மரம் எது? - நாகமரம்
4. யாழ்ப்பாணத்தில் பாய்கின்ற ஆறு எது? - வழுக்கியாறு
5. சிங்கள மொழிப் பஞ்சாங்கத்தின் பெயர் எது? - இராணம்
6. அஸ்பிரின் கண்டுபிடித்தவர் யார்? - டி ரெசர்
7. ஒலிம்பிக் சின்னத்திலுள்ள ஐந்து வளையங்களின் நிறங்கள் எவை? - நீலம், சிவப்பு, கறுப்பு, பச்சை, மஞ்சள்

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- ஆ.சத்தியன்
கற்கும் பாடசாலை :-
கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை
தரம் :- 1
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட்.

முழுப்பெயர் :- ம.அனுசன்
கற்கும் பாடசாலை :-
குடத்தனை அ.மி.த.க. பாடசாலை
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், விளையாட்டு,
வானொலி கேட்டல்.

முழுப்பெயர் :- கா.நிசாந்தன்
கற்கும் பாடசாலை :-
டிறிபேக் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட் விளையாடுதல்,
ஒகன் வாசித்தல்.

முழுப்பெயர் :- கு.சுரேஸ்காந்
கற்கும் பாடசாலை :-
டிறிபேக் கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்,
சங்கீதம்.

முழுப்பெயர் :- த.தர்மராஜ்
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட்.

முழுப்பெயர் :- ச.கவிதாசன்
கற்கும் பாடசாலை :-
பொலிகண்டி இ.த.க. பாடசாலை
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள்:
ஓவியம் வரைதல், கிரிக்கெட்.

முழுப்பெயர் :- கி.அமலநாதன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
நடனம், இசைக்கருவி, பாட்டு.

முழுப்பெயர் :- ச.துவாரகன்
கற்கும் பாடசாலை :-
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், முத்திரை சேகரித்தல்

முழுப்பெயர் :- சி.சக்திதாசன்
கற்கும் பாடசாலை :-
புலோலி சைவப்பிரகாச வித்தியாலயம்
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
வானொலி கேட்டல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :.............................
கற்கும் பாடசாலை :.............................
கற்கும் தரம் :.............................
வீட்டு முகவரி :.............................
பிறந்த திகதி :.............................
ஆர்வமுள்ள துறைகள் :.............................
:.............................

............... திகதி ............... ஒப்பம்

............... அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............... பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# உங்கள் கைவண்ணம்



சி.நிசாந்
தரம் - 6
கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்



ந.நேத்திரபாலன்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
தரம் - 10

## பொருள் தெரியுமா?

காகை காகா கூகை
கூகை காகா காகை

இரவில் கூகைக்கு நன்கு கண்தெரியும். காக்கைக்கு இரவில் கண்தெரியாது. இதனால் கூகைகள் இரவில் காக்கையைத் துன்பப்படுத்தும். அதுதான் - காகை காகா கூகை.
காக்கைக்கு பகலில் நன்கு கண் தெரியும். ஆனால், கூகைக்கு பகலில் கண்தெரியாது. இதனால் காக்கைகள் பகலில் கூகையைத் துன்பப்படுத்தும் - அதுதான்
கூகை காகா காகை

## சந்தேகம் - விளக்கம்

### இரும்பு ஏன் துருப்பிடிக்கின்றது?



ஈரமான இடத்திலோ, பனி பெய்யக்கூடிய இடத்திலோ இரும்புத்துண்டு ஒன்றை கொஞ்சநாட்கள் போட்டு வைத்தால் என்ன நடக்கும்? அதில் யாரோ சிவப்புநிறத் தூசியை தூவியதுபோல மாறி விடும். அதுதான் துரு. இரும்பு ஒட்சைட்டு என்பது அதன் பெயர். உலோகத்தை சுற்றியிருக்கும் ஒட்சிசன் தண்ணீரில் கரைந்து, உலோகத்தை வேதிவினை காரணமாக எரியச்செய்து, இரும்பு ஒட்சைட்டாகப் படர்கிறது. காற்றில் ஈரப்பதனோ அந்த இடத்தில் தண்ணீரோ இல்லாமல் இருந்தால் ஒட்சிசன் தண்ணீரில் கரையாது, துருவும் உருவாகாது. பளபளப்பான இரும்புத்துண்டின்மீது மழைத்துளி விழும்போது என்ன நடக்கும். வேதிவினை இடம்பெற்று மழைத்துளிக்குள் துரு உருவாகிவிடும். சிறிது நேரத்தில் மழைத்துளி ஆவியாகிவிடும். ஆனால், அதிலிருந்த துரு இரும்பின் மீது படர்ந்து நிறத்தை மாற்றிவிடும். அதுமட்டும் இல்லாது அந்த ஒரு துளி நீரினால் ஏற்பட்ட துரு மெல்ல மெல்ல இரும்பின் வெளிப்பகுதி முழுவதையும் ஆக்கிரமிக்கும். உலோகத்தின் இயல்பான தன்மைகளும் மாறிப்போய் வலு விழந்துவிடும். நீரோ, ஈரமோ இல்லையென்றால்கூட வேதிவினைக்குத் தேவையான ஈரப்பதத்தை எப்படியாவது கவர்ந்து இழுத்துக்கொண்டு துரு பரவும். துரு விடயத்திலும் வருமுன் காப்பதே எளிதானது. இரும்பு, ஸ்ரீல் போன்ற பொருட்கள் நீண்டகாலம் உழைக்கவேண்டியிருக்கும் இல்லையா? பிளாஸ்ரிக் உறையினால் சுற்றிவைப்பது, துரு எதிர்ப்பு பெயின்டை பூசுவது போன்றவை இரும்பினைத் துருவிலிருந்து காப்பாற்றும்.

## தகவல் தொடர்பு ஊடகங்கள்

அதிவேகமாக வளர்ந்துவரும் தகவல் தொடர்பு ஊடகங்களில் இன்ரநெட் முதலிடத்தில் உள்ளது. தகவல் தொடர்பு ஊடகங்களில் பரவல்திறனைப் பொறுத்தவரையில் தொலைக்காட்சியே மிக அதிக பரவல்திறன் கொண்டதாகத் திகழ்கிறது. 47.2 வீதத்தினர் தொலைக்காட்சியைப் பார்வையிடுகின்றனர்.

இதையடுத்து வருவது பத்திரிகைகள் 32.9 வீதத்தினர் பத்திரிகையைப் பார்வையிடுகின்றனர். வானொலியை 17.7 வீதத்தினர் கேட்கின்றனர். மற்றும் திரைப்படத்தை 12.8 வீதத்தினர் பார்க்கின்றனர் - முதலிடத்தில் இன்ரநெட் உள்ளது.

உ.கௌசிகா, தரம் - 10
கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்

## வங்கிகளின் ATM Card பெயரை தெரிந்துகொள்ளுங்கள்

| | |
|---|---|
| மக்கள் வங்கி | Pet Card |
| இலங்கை வங்கி | Cey Bank Cash point |
| வர்த்தக வங்கி | Cat Card |
| சம்பத் வங்கி | Set Card |
| ஹற்றன் நஷனல் வங்கி | Cash line Card |
| செலான் வங்கி | Smart Card |
| தேசிய சேமிப்பு வங்கி | Net card |
| சார்ட்டட் வங்கி | Money Link Card |

ATM Card என்பது வாடிக்கையாளர் தனது கணக்கில் பணத்தை வைக்கவும், எடுக்கவும் வங்கி ஊழியர் இன்றி நாம் வங்கியால் தரப்பட்ட ரகசிய எண்ணை அழுத்தி தமது தேவையை நிறைவு செய்வதாகும்.

தி.சாரங்கன்

## பாடசாலைக்குச் செல்லாத

# பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் கல்வி அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும்

## யுனிசெப் வதிவிடப் பிரதிநிதி தெரிவிப்பு

போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பாடசாலை செல்லாமலுள்ள பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில், கல்விசார் அதிகாரிகள் அக்கறை செலுத்த வேண்டுமென யுனிசெவ் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி டேய்ட் செய்வஸ் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வாகனங்களையும், மோட்டார் சைக்கிள்களையும் வழங்கும் வைபவம் நேற்று வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் - இலங்கையில் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வசிக்கும் குறிப்பிட்டளவான பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்வதில்லை. அவர்களை பாடசாலைகளுக்கு வரவழைக்கவேண்டிய பாரிய பொறுப்பு கல்விச் சமூகத்தினரையே சாரும்.

யுனிசெவ் நிறுவனத்தினர் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாணவர்களுக்கு உதவுவதற்காகப் பல முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

இந்த உதவிகளைச் சரிவரப் பயன்படுத்திக்கொண்டு, போரினால் பாதிக்கப்பட்டவர்கள் நன்மை அடைய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வைபவத்தில் 11 மில்லியன் ரூபா பெறுமதியான வாகனங்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பணியாற்றும் வலயக் கல்விப் பணிப் பாளர்களுக்கு வழங்கப்பட்டன.



எக்கோ நிறுவன நிதியுதவியுடன், கரித்தாஸ் நிறுவனத்தினர் யாழ்.கியூடெக் நிறுவனத்தினூடாக மட்டுவில் மத்தி (இடைக்குறிச்சி) பிரதேசத்திற்கு 10 நீர் இறைக்கும் இயந்திரங்களும், 18 தெளிகருவிகளும் கடந்த பொங்கல் தினத்தன்று வழங்கப்பட்டன. இதனை வைபவரீதியாக கரித்தாஸ் பிரான்ஸ் நிறுவனத்தின் இலங்கைக்கான திட்ட இணைப்பாளர் பற்றிக் வழங்குவதையும், பயனாளியொருவர் பெற்றுக்கொள்வதையும் காணலாம். (91)

# அடாவடித்தனத்தில் ஈடுபட்ட நான்கு இளைஞர்கள் கைது

## ஆனைக்கோட்டையில் சம்பவம்

வீடொன்றினுள் புகுந்து அங்கிருந்த பொருட்களை உடைத்து, அடாவடித்தனம் புரிந்த நான்கு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பின் பிணையில் விடுக்கப்பட்டனர்.

ஆனைக்கோட்டை - பொன்னையா வீதியிலுள்ள பரமநாதன் இன்பராணி என்பவரது வீட்டில் கடந்த 20 ஆம் திகதி ஆறு பேர் கொண்ட இளைஞர் குழுவொன்று, இரவுவேளை புகுந்து அங்கிருந்த தளபாடங்களை சேதப்படுத்தியதுடன், மின்விளக்குகளையும் அடித்து நொருக்கினர்.

இது தொடர்பாக வீட்டுக்காரரால் யாழ்.பொலிஸ்நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, நான்கு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்து நேற்றுமுன்தினம் நீதிபதி இ.த. விக்னராஜா முன் ஆஜர்படுத்தினர்.

விசாரணைகளின்போது, முறைப்பாட்டுக்காரர் தனது வீட்டிலிருந்த பதினான்காயிரம் ரூபா பணமும், சைக்கிள் ஒன்றும் இந்தச் சம்பவத்தில் பின்னர் காணாமற்போயுள்ளதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

சந்தேகநபர்களால் முறைப்பாட்டுக்காரருக்கு இருபத்தோராயிரம் ரூபா நட்டஈடாக வழங்கப்படுவதையடுத்து, நான்கு இளைஞர்களையும் தலா பதினைந்தாயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், வழக்கு விசாரணைகளை எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.(ச)

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### மூன்றாவது அகவையில்



பெயர் : ந.யதுர்ஜன்
முகவரி : தில்லையம்பதி, கோண்டாவில்.

### பத்தாவது அகவையில்



பெயர் : ந.ஜீவிதா
முகவரி : 11 ஆம் வட்டாரம் நெடுந்தீவு.

# ஊனமுற்றோர் விபரத்தை திரட்டித்தரக் கோரிக்கை

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல வலுவிழந்தோர்களினதும் விபரத்தையும் திரட்டித்தருமாறு அந்தந்தப் பகுதி சமூகசேவை உத்தியோகத்தர்களுக்கு மேலதிக அரச அதிபர் ப.திலகநாயகம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

இந்த விபரங்களை எதிர்வரும் 6 ஆம் திகதி 10 மணிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு, அவர் கேட்டுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் கண்டியில் வலுவிழந்தோருக்கு உதவுவது தொடர்பான மாவட்ட அரச அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளமையால், அங்கு இந்த விபரங்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

பல்வேறு உதவித் திட்டங்களுக்கும் இந்த விபரம் தேவைப்படுவதால், அவற்றைக் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். (ப)

# வடமராட்சி கம்பன் கழகம் நடாத்தும் சேக்கிழார் விழா

(வடமராட்சி)

வடமராட்சி கம்பன் கழகம் - சேக்கிழார் விழாவொன்றை மூன்று நாட்கள் தொடர்ந்து நடாத்தவுள்ளது. எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வு - 4 ஆம் திகதிவரை நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் சென்னையிலிருந்து வந்துள்ள பேராசிரியர் அரங்க.இராமலிங்கம் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளதுடன், விவாத அரங்குகளுக்கும் தலைமைதாங்கவுள்ளார்.

மூன்று நாள் நிகழ்வுகளுக்கும் - பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர், பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளதுடன், பலரும் சிறப்புரையாற்றவுள்ளனர். (116)

# சுவாமி விவேகானந்தர் ஜயந்தி தின ஆன்மீக விழா

(உடுவில்)

சுவாமி விவேகானந்தர் ஜயந்திதின ஆன்மீகவிழா - நாளை மாலை 4 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

விவேகானந்தர் நற்பணி மன்றத் தலைவர் சிவவதனி கோபால் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர் இ.குமாரவடிவேலும், சிறப்பு விருநதினர்களாகச் சுவாமி சித்ரூபானந்தா, இ.இராஜமகேந்திரசிங்கம், சுவாமி செல்லத்துரை ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் விவேகானந்தர் தினத்தை முன்னிட்டு, மாணவர்களிடையே நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும், மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (101)

# சின்னஞ் சிறு செய்திகள்

### விசேட கலந்துரையாடல்

கடல் உயிரின வளத் தொழில் நுட்பப் பாடத்தைக் கற்பித்துக் கொண்டிருக்கும் சகல ஆசிரியர்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று - நாளை மு.ப. 8.30 மணிக்கு யாழ்.கல்வி வலய அலுவலகத்திலுள்ள கல்வி மேம்பாட்டு பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்விமேம்பாட்டு கழகப் பேரவையினர் கேட்டுள்ளனர்.

### புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

திருமறைக் கலாமன்றத்தினரின் இந்த ஆண்டுக்கான நாடகப் பயில் வகுப்பு, சிறுவர் கலைக்கூடம் என்பன ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இன்று மாலை 4 மணிக்கு சிறுவர் கலைக்கூட புதிய பிரிவுகளும், நாளை நாடகப் பயில் வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

திருமறைக் கலாமன்ற கலைஞர்களுக்கான மாதாந்த ஒன்றுகூடலும் நாளை நடைபெறவுள்ளது. இதில், புதிய அங்கத்தவர்களும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (91)

### கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

'மனிதவளர்ச்சிக்கு சுய ஆய்வு' எனும் தலைப்பிலான கருத்தரங்கு நிகழ்வொன்று - இன்று நடைபெறவுள்ளது. இலங்கை திருச்சபை வட பிராந்திய வாலிபசங்க ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கு- மாலை 4 மணிக்கு பரி.யாக்கோப்பு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சமாதானம் தொடர்பான சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக வடக்கு - கிழக்கு மக்களின் எதிர்பார்ப்பை அறிவது தொடர்பான சந்திப்பொன்று - இனறு நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பட்டில் நடைபெறவுள்ள இந்தச் சந்திப்பில், அரசியல் அமைப்பு விவகார அமைசசின் ஆலோசகர் உட்பட, முக்கிய அதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக மக்களின் உணர்வுகளை அறிவது தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

### மெய்வல்லுநர் போட்டி

யாழ்.தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப.2 மணிக்கு, பாடசாலை அதிபர் மு.கணபதிப்பிள்ளை தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.(130)

### புதிய நிர்வாகசபை தெரிவு

அளவெட்டி வடக்கு ஞான வைரவர் சனசமுக நிலையத்திற்கு, புதிய நிர்வாகிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். புதிய நிர்வாகசபையின் - தலைவராக ச.தனராஜாவும், செயலாளராக இ.இராகுலனும், பொருளாளராக வைத்திய கலாநிதி நா.மகேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ச)

### அழகுக்கலைக் கண்காட்சி

யாழ்.மத்திய கல்லூரியில் நாளை காலை 10 மணிக்கு அழகுக் கலைக் கண்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பல்வேறு அழகுக்கலை தொடர்பான காட்சிப் பொருள்கள் பார்வைக்கு வ்வக்கப்படவுள்ளதுடன், செய்முறைப் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வில் - பிரதம விருந்திராக இந்து கலாசார அமைச்சு மேலதிக செயலாளர் கலந்துகொள்ளவுள்ளார். (ப)

### கட்டுரை, சித்திரப் போட்டிகள்

வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவனம் - மிதிவெடி மற்றும் வெடிக்காத பொருட்களினால் ஏற்படும் ஆபததுக்களில் இருந்து எம்மை பாதுகாத்தல் எனும் தலைபபில் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, சித்திரப் போட்டிகளை நடாத்தவுள்ளது.

இன்று ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டிகள் - எதிர்வரும் 3 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன. இது தொடர்பான மேலதிக விபரங்களை நேற்றைய நமது ஈழநாடு பத்திரிகையில் பார்வையிடலாம்.-

### பாரம்பரிய கலைப் போட்டிகள்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்திவரும் - கூத்து, இசைநாடகம், கிராமியக் கலைகள் தொடர்பான போட்டிகள்- இன்றும், நாளையும் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

கிராமிய கலைகளில் - கிராமியப் பாட்டு, கிராமிய நடனம், வில்லுப் பாட்டு, காவடி, கரகம், கும்மி, கோலாட்டம் காலை 10 மணி முதல் நடைபெறவுள்ளன. (91)

### வலைப்பந்தாட்ட அணித் தெரிவு

யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட அணித்தெரிவு நாளை நடைபெறவுளளது. மாலை 2 மணிக்கு யாழ்.பலகலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள அணித்தெரிவில் ஆர்வமுள்ள வீராங்கனைகளை கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

### பரிசளிப்பு விழா

வடமராட்சிக் கல்வி வலயக் கணித, விஞ்ஞான செயற்திட்ட பொது அறிவுப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா - இன்று காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பளார் வி.அருளானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி மா.நடராஜ சுந்தரமும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிபபாளர் சி.தியாராசா, நெல்லியடி ம.ம.வித்தியாலைய அதிபர் செ.சேதுராசா, ஹாட்லிக்கல்லூரி அதிபர் வே.பத்மநாதனும், கௌரவ விருந்தினராக வடமராட்சி வலய கல்விக் கழகப் பொறுப்பாளர் கி.தாயகனும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய விஞ்ஞான ஆசிரியர் ச.கைலாசபதி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (122)

மருத்துவம்

- செந்தணன் - விக்கி.

# யாழ்.மக்களுக்கான வைத்தியசேவையில் 'அப்பலோ' உருவாக்கம் புதிய அத்தியாயம்

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களின் நெடுங்கால விருப்பமாக இருந்துவரும் 'அப்பலோ' மருத்துவ மனையின வைத்திய சேவை - இன்றுமுதல் யாழ்ப்பாணத்திலும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

யாழ்.மக்களுக்கான மருத்துவ சேவையின் ஓர் உன்னத நிலையாகவே இந்த வைத்திய சேவையின் அறிமுகம் குறிப்பிடப்படுகிறது. யாழ்.மாவட்டத்தில் இருந்துகொண்டு, பல்வேறு சலுகைகளின் அடிப்படையில் ஆரம்பகட்டப் பணிகளை மேற்கொள்ளும் இந்த வைத்திய சேவை படிப்படியாக விரிவுபடுத்தப்படவுள்ளது என, கொழும்பு அப்பலோ வைத்திய சேவை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

ஸ்ரான்லி வீதியில் இல 212 இல் அமைக்கப்பட்டிருக்கும் இந்த வைத்தியசாலையானது, நோயளர்களுக்கான ஆரம்பகட்ட வைத்திய சேவைகளை இங்கு வைத்தே வழங்கவுள்ளது.

அதேவேளை, மேலதிக சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்கள் இதன் கொழும்புக் கிளைக்கும் விருப்பத்தினடிப்படையில் அனுப்பிவைக்கப்படவுள்ளார்கள்.

இந்தியாவில் இயங்கிவரும் அப்பலோ வைத்தியசாலையின் பிரசித்திபெற்ற வைத்தியர்களின் சேவையை நேரடியாகப் பெற்றுக் கொள்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதுடன், அவசர சிகிச்சைப் பிரிவு முதலிய சேவைகபடவுள்ளது. கண், காது, மூக்கு, முறிவு, நெரிவு மற்றும் நீண்டநாள் குணப்படாத நோய்கள் என்பவற்றுடன் புற்றுநோய், சலரோகம் என அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை இங்கு அளிக்கப்படவுள்ளது.

இதனைவிட, இங்கிருந்து கொண்டே நோயாளர்கள் வெளி இடங்களில் இருக்கக் கூடிய பிரசித்திபெற்ற வைத்தியர்களின் சிகிச்சையைப் பெறக்கூடியதான தொலைக் காட்சி வைத்தியசேவையும் (Tele madisin) பெற்றுக் கொள்ளமுடியும்.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் ஆயுட்காப்புறுதி செய்துள்ளவர்கள் இங்கு பணம் எதுவும் செலுத்தாமலேயே சிகிச்சைபெறமுடியும். இதனைவிட ஏழைகள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு வைத்தியசாலையினூடாக சில சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

இதைவிட, இவ்வாறான வைத்திய சேவையை வழங்குவதற்காக - ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெறப்படுவதுண்டு. இந்தச் சலுகை இனிமேல் யாழ். மக்களுக்கும் கிடைக்கவுள்ளது.

வைத்தியசேவையில் நிலவக்கூடிய பல்வேறு குறைபாடுகளையும், களையும் வகையில் செயற்படவுள்ள இந்த வைத்தியசாலையில் விபத்துக்கள், குண்டுவெடிப்புக்கள், துப்பாக்கிச் சூடுகள் முதலிய சகலவித பாதிப்பிற்




ளும் இயங்கவுள்ளன.

ஆரம்ப கட்டமாக மேலதிக சிகிச்சை பெறுவோர் உடனுக்குடன் விரைவாக விமானம் மூலமாக கொழும்புக்குக் குறைந்த செலவில் அனுப்பி வைக்கப்பட்டு, அங்குள்ள அப்பலோ வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு நிலைமையின் நம்பகத் தன்மை, போக்குவரத்து வசதியின் விரைவு என்பவற்றைப் பொறுத்து விரைவில் அதிநவீன மருத்துவ சேவைகொண்ட அப்பலோ வைத்திய நிலையம் ஒன்று யாழ்.நகரிலேயே அமைக்கப்குள்ளாவோரும் சிகிச்சை பெற்றுக் கொள்ள முடியும். அவர்களுக்கான சட்டவைத்திய அதிகாரியின் சேவையும், இங்கு 24 மணி நேரமும் நடைபெறவுள்ளது.

மூன்று மொழிதெரிந்த வைத்தியர்களும் இங்கு பணியாற்றவுள்ளனர். இன்று திறக்கப்படும் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சையளிக்கவிருப்பவர் யாழ்ப்பாணத்தைச் சோந்த - கேரி. இறைவன் என்ற வைத்தியராவார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வைத்தியர்களும், இங்கு பணியாற்றவுள்ள போதிலும், யாழ்.குடாநாட்டில் பயிற்றப்பட்ட தாதியரே இந்தப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். பொதுமக்களின் தேவைகருதி, வீடுகளுக்குச் சென்று, நோயாளர்களை ஏற்றிவரக் கூடிய வகையிலான 'அம்புலன்ஸ்' வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆறு மாதங்களில் - 10 நோயாளர்கள் கொழும்பு அப்பலோ வைத்தியசாலை யுடன் தொடர்புகொண்டு, அங்கு மேலதிக சிகிச்சை பெறப்போவதாக வேண்டிக் கொண்டனர். இதனால், அப்பலோ வைத்தியசாலையே அவர்களைப் பெறுப்பேற்று, இங்கிருந்து அழைத்துச் சென்று, வெற்றிகரமாகச் சிகிச்சையளித்துள்ளது.

இவ்வாறான பல்வேறு சர்வதேச தரம் மிக்க சேவைபுரியவுள்ள இந்த வைத்தியசாலை, இன்று திறந்து வைக்கப்படுவதானது, போரின் அழுத்தங்கள் மற்றும் பாதிப்புக்கள் காரணமாகப் பல்வேறு நோய்களைக் கொண்டிருப்போருக்குச் சுக வாழ்வை வழங்குவதாகவும், எவ்வளவுக்கு இலாபத்தை விடுத்து, சேவையை வழங்முடியுமோ அந்தளவுக்கு நிறைந்த சேவையை யாழ்.மக்கள் பெற வழி செய்யும் ஓர் வைத்திய நிலையமாகவும் செயற படுமென, நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆய்வரங்கம்

- சேனாதிராசா ஜெயானந்தன்

# பன்முகப் பயன்பாடு நிறைந்த முள்ளிக் கிராமம் பயன்படாமற் போகுமா?

(நேற்றைய தொடர்ச்சி...)

இதனால், இவ்விடங்கள் துப்பரவற்ற தரையாகமாறி, அவை மாசடைவதைக் காணலாம். இவை சம்பந்தப்பட்ட சூழல்பாதுகாப்புக் குழுக்களால் பாதுகாக்கப்பட வேண்டியதொன்றாகும்.

மேலும் இப்பகுதிகளில் கல்வளமும் நிறைந்திருப்தைக் காணலாம். இவை சிறந்த நிர்வாகம் ஒன்றின் கீழ் அகழ்ந்தெடுக்கப்படுமாயின் அவை சிறப்பான தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்குமெனலாம்.

இதுவரை நாம் பார்த்தது வரணிக்கிராமத்தின் ஒரு சிறிய பிரதேசமான "முள்ளி" நிலப்பரப்பே ஆகும். இதேபோல் எத்தனையோ பகுதிகள் வரணியில் வளம்பல நிறைந்த பூமியாகக் காணப்படுகின்றன. இதனால் தான் "வந்தாரை வாழவைக்கும் வரணி" என அழைக்கப்படுகின்றதோ!

இந்தவகையில் நோக்குகையில் யாழ். மாவட்டமானது ஏராளமான பகுதிகளில் வளங்களைக் கொண்டுள்ளது. ஆனால், இளைஞர் சமூகமோ இதனைக் கண்டறிந்து தமது மனிதவளத்தினை மறுபங்கீடு செய்யாது குறிப்பாக, படித்த பட்டதாரிகள் தமக்கு அரச வேலைதான் வேண்டுமென அந்நியரிடம் பிச்சை கேட்பது மிக வேடிக்கையான செயலாகும்.

தனது சொந்தப் பூமியில் தமது சொந்த வளத்தினைப் பயன்படுத்தி யாருக்கும் அடிபணியாது தமது நாட்டைத் தாமே அபிவிருத்தி செய்து, சமூகத்தில் ஓர் உயர்மதிப்பைப் பெறக கூடிய நிலவளத்துடன்கூடிய மனித வளத்தினை இணங்காணாததே இதற்குக் காரணமாகும்.

இதற்கு இந்த மாவட்டத்தில் காணப்படும் உயர்கல்வி நிறுவனங்களின் கல்விக்கொள்ளைகளும், போதனை முறைகளில் உள்ள குறைபாடுகளும் ஒருகாரணமாக அமையலாம். உதாரணத்துக்கு எடுத்துக்கொண்டால், இந்தப் பிரதேசத்தில் காணப்படும் உயர்கல்வி நிறுவனம் ஒன்று, மீன்பிடியியல்



கற்கையினைக் கட்டணம் அறவிட்டுப் போதிக்கின்றது. எனினும், இதிலிருந்து வெளியேறும் மாணவர்கள் சுயமாகத் தொழில் அல்லது ஆய்வில் ஈடுபடுவதனூடாகப் புதிய தொழில் கொள்கைகளையும், நுணுக்கங்களையும் பின்பறறுவதை விடுத்து தாம் பல்கலைக்கழகப் பட்டதாரிகள் என, அரச நியமனத்துக்கு அடிபடும் பரிதாப நிலையே காணப்படுகிறது. இந்த நிலை எதிர்காலத்தில் தவிர்க்கப்படவேண்டும்.

இதற்கு யார் காரணம்? கல்விப்போதனையா? அல்லது கல்வியை உள்வாங்கியவர்களின் சிந்தனையா? என்பது ஆய்வு செய்யப்பட வேண்டியதொன்றாகும்.

இதேபோன்று விவசாயத்துறை சார்ந்த பிரதேசங்களுக்குச் சென்று ஆய்வு செய்து, மனிதவளப் பயன்பாட்டினை மண்வளத்தோடு ஊக்குவித்தல் வேண்டும். அதைவிடுத்து, ஆளணிப் பற்றாக்குறையெனக் கூறிக்கொண்டு, பட்டறிவின்றிப் பட்டங்கள் பலபெற்று, அதனைத் தொடராகக் குறிப்பிட்டு, பழைய கருத்துக்களைப் புதிய எழுத்துவடிவில் வெளியிடும் நிலை குறைக்கப்படுதல் வேண்டும்.

இங்கு மக்களுக்குத் தேவையான பல புதிய உபாயமும், அதன்மூலம் மனிதவள பயன்பாட்டு விருத்தியும் அதனூடே எவ்வாறு குடும்பப் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் என்பதை கிராமம்தோறும் விலாவாரியாக எடுத்தியம்புதல் வேண்டும். ஏனெனில், ஏழை விவசாயிகள் எல்லோரும் கற்றவர்களோ அல்லது பத்திரிகை வாங்கத் தகுதி கொண்டவர்களோ அல்ல என்பதாகும்.

எனவே, இப்படிப்பட்டவர்கள் முள்ளி போன்ற பிரதேசங்களை ஆய்வுசெய்து செயற்திட்டங்களை வகுத்தல் வேண்டும். இந்தவகையில், இந்தப் பிரதேச இறைமையினை நோக்குகையில், இந்தநிலப் பரப்பின் பெரியதொருபகுதி அரசுக்குச் சொந்தமாக இருப்பதனால், இந்தப் பிரதேச அபிவிருத்தியினை அரசோ அல்லது பணம் படைத்த முதலாளிகள் கொள்வனவு செய்தோ பின்வரும் செயற்திட்டங்களுக்காகப் பயன்படுததலாம்.

1. சிறந்த சுற்றுலாப் பிரதேசமாக மாற்றுதலும், உல்லாசப்பயண விடுதிகள் அமைத்தலும்,

2. பருவகாலத்தில் நீர் நிறைந்திருப்பதனால், அதனைத் தேக்கி சிறந்த நன்னீர் மீன்பண்ணை அமைத்தலும், சுத்திகரிக்கபபட்ட நீர் விநியோகமும்,

3. இந்தப்பகுதியானது, திறந்த வெளிப்பரப்பினைக் கொண்டதால், வளிமண்டல ஆராட்சி நிலையமோ அல்லது விண்வெளி ஆய்வு நிலையமோ அமைத்தல்.

4. முக்கியமான வீதி, சுத்தமானவளி, குடிசனநெருக்கக்குறைவு என்பன காணப்படுவதால, நவீன வைத்தியசாலையினையோ அல்லது உயர்கல்விக் கூடங்களையோ அமைத்தல்.

5. இந்த இடமானது, வடமராட்சிக்கும், தென்மராட்சிக்கும் இடையில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக அமைவதால், சர்வதேச விமானநிலையம் ஒன்றை அமைத்தல் அல்லது சுதந்திரவர்த்தக வலயம் ஒன்றினை நிறுவுதல்.

மேற்கூறப்பட்டவற்றில், ஒன்று அல்லது பல செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படுமாயின், இதன்மூலம், இந்தப் பிரதேச அபிவிருத்தி உட்பட தொழில்நுகர்வோர் மத்தியில் காணப்படும் வேலையில்லாத்திண்டாட்டம், பசி, பட்டினி, களவு, பொய், வறுமை என்பன நீங்கி வளமான வாழ்வு ஏற்படவழி ஏற்படும்.

இது சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வினைக் களைவதோடு, மகிழ்வான குடும்ப வாழ்வு முறையையும் உண்டாக்கிவிடும்.

எனவே, நாம் இருக்கும் இயற்கை வளத்தினை இனங்கண்டு, புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, கிடைக்கும் மனிதவளத்தைக் கொண்டு, ஜப்பானைப்போன்றோ அல்லது சீனாவைப் போன்றோ முன்னேறுவோம். ஏனெனில், நாம் ஒரு வாயுடன் மட்டும் படைக்கப்படவில்லை. இருகரங்களையும் கொண்டு படைக்கப்படவுள்ளோம்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்அறிதல் வேந்தன் தொழில்.

திருக்குறள

# நமது நோக்கு

## உயர் பாதுகாப்பு வலய குடியேற்றம் தமிழ் மக்களின் ஜீவாதார உரிமை

யாழ்.குடாநாட்டிலுள்ள இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில் அந்தப் பிரதேசங்களுக்கு உரித்துடைய மக்கள் மீளக்குடியேறி வாழும் அடிப்படை உரிமையை 'தேசியப் பாதுகாப்பு' என்ற நியாய மற்றதும், அர்த்தமற்றதுமான காரணத்தைக் காட்டி அரசாங்கமும், படைத்தரப்பும் தொடர்ந்து நிராகரித்துவருவதானது இன்றைய சமாதான - போர்நிறுத்த சூழலிலும் இராணுவமும், பேரினவாத சிந்தனையில் ஊறிய அரசும், பாதுகாப்புத் துறையை தன்வசமாக்கி வைத்துக்கொண்டு அதிகார அரசியல் நிர்வாகத்தை அழுத்தமாகவே மேற்கொண்டுவரும் ஜனாதிபதியும், தமிழ்மக்களின் அடிப்படையானதும், மிக அத்தியாவசியமானதுமான வாழ்வியல் உரிமைகளைக்கூட அங்கீகரிக்கும் ஜனநாயக மனோபாவமற்றவர்களாக தொடர்ந்தும் இருப்பதையே உணர்த்து வதாக உள்ளது.

போர் மற்றும் அரசியல் ஒடுக்குமுறைகள் காரணமாக கடந்த இரு தசாப்த காலமாக தமது சொந்த மண்ணில் - சொந்த வதி விடத்திலான சுதந்திரவாழ்வு அநீதியான முறையில் அபகரிக் கப்பட்டு, ஏதிலியராக திசைதோறும் துரத்தப்பட்ட நிலையில் இடம் பெயர்ந்தும், புலம்பெயர்ந்தும் இன்னல் மிகுந்த, இழப் புக்கள் நிறைந்த வாழ்வை வாழ்ந்த தமிழ் மக்கள் போர் நிறுத் தப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு மீள்குடி யேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு என்று பெரிதாக சர்வதேச மட்டத்தில் பிரசாரம் செய்யப்படும் நிலையில் மீண்டும் தத்தம் சொந்த இருப்பிடங்களுக்கு சென்று, நிம்மதியாக வாழும் உரிமையை சிங்கள அரசும், அதன் இராணுவமும் முரட்டுத்தனமாக, வரட்டுத்தனமான காரணங்களை கூறி மறுக்க முற்படு கின்றதென்றால், தற்போதைய சமாதானம் தமிழ்மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் வலுவற்றதும், ஜனநாயகத்தைக் கேலி செய்வதுமான ஒன்றென்றே கருதவேண்டும்.

குடாநாடு பூராவும் இராணுவ முற்றுகை நிலை தொடர்ந்த வண்ணம் உள்ளது. துப்பாக்கியின் விசையில் விரல் பதித்தபடி அழுகதத் தயாரான நிலையில் இமை அசைக்காது வீதியில் போகும் அப்பாவிப் பொதுமக்களைக் குறிவைத்து வெஞ்சினப் பார்வையைப் பார்க்கும் இராணுவம் போருக்கான தயார்நிலையில், அர சினது படைத்தலைமையினதோ சமிக்ஞைக்காக காத்திருக்கும் நிலையில் சமாதானம் என்பது படைத்தரப்பால் சுற்றிவளைக் கப்பட்டிருக்கிறது என்பது தெளிவு.

இந்தநிலையில், சொந்த மண்ணில் சொந்தக் குடிசையிலாயினும் அமைதியான வாழ்வொன்றை வாழ்வதற்கு ஏங்கும், மீள்குடியேற்ற ஆர்வமுடன் தாய்நிலம் நோக்கி வந்த மக்களுக்கு முட்கம்பி வேலிகளும் எச்சரிக்கைப் பலகைகளும் துப்பாக்கி முனையுடான அச்சுறுத்தல்களுமே வரவேற்பு வழங்கிய அவலத்தை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டது.

தனது இராணுவத்தின் இருப்பை உறுதிசெய்து கொள்ளவும், அதன்மூலம் தமிழ்மக்கள் தொடர்ந்தும் தமது ஆதிக்க வலு வின் இரும்புப் பிடிக்குள் கொத்தடிமைகளாக வசிக்க வேண்டும் என்ற வக்கிர அபிலாஷையை நிரந்தரமாக்கிக் கொள்ளவுமே சமாதான காலத்திலும் அரசு தனது நகர்வுகளை மேற்கொண்டது என்பதற்கு உயர்பாதுகாப்பு வலய விவகாரம் சிறந்த உதாரணமாகும்.

உண்மையில் சமாதானத்தையும், சக வாழ்வையும் அரசு விரும்பியிருக்குமேயானால் சிறுபான்மை மக்களின் வாழ்வியல் மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் பண்புடன் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பித்திருக்குமேயானால் உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையை ஒரு 'இடியப்பச் சிக்கலான' விவகாரமாக்கியிருக்காது.

சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிக்கும் தந்திரோபாயமே உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பான அரசின் அணுகுமுறைகளாகும்.

சொந்த நாட்டு மக்களின் அடிப்படை உரிமை தொடர்பான பிரச்சினைக்கு மனிதாபிமான ரீதியில் தமது சுய அதிகாரத்தைப் பயன்படுத்தி புரிந்துணர்வின் அடிப்படையில் தீர்வுகாணக்கூடிய சுலபமானு வழிகள் இருக்க, அதற்கு இந்தியாவிலிருந்தும், அமெ ரிக்கா, பிரிட்டன் என இதற்கு சம்பந்தமில்லாத இந்த விவ காரத்தின் மனிதநேயப் பரிமாணங்களைப் புறந்தள்ளிச் சிந் திக்கும் தமக்கு சார்பான ஜெனரல் நம்பியார் போன்ற இராணுவப் புள்ளிகளை அழைத்து ஆலோசனை கேட்ட போதே அரசின் நேர்மையற்ற சமாதான நகர்வை பின்தள்ளும் உள்நோக்கம் தெளிவாயிற்று.

எதுவானாலும், உயர்பாதுகாப்பு வலய மீள்குடியேற்றம் குறித்த பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு எட்டப்படாத நிலையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சமாதான முயற்சியும் அர்த்தமற்ற ஒன்றாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில் யாழ்.குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசங்களில் மீள்குடியேற்றம் மேற்கொள்ளமுடியுமா என்று உயர்நீதிமன்றம் சட்டமா அதிபரிடம் ஒரு வழக்குத் தொடர்பாக விளக்கம் கோரியிருந்தமைக்கு அவர் நாவற்குழிப் பகுதியில் மட்டும்விவசாய நடவடிக்கையை மேற்கொள்ள அனுமதிக்கலாமென தனது அறிக்கையில் தெரிவித்துள்ளாராம்.

ஆனால், நீதிமன்று இந்த அறிக்கை ஏற்புடையதல்ல என நிராகரித்ததுடன், மீள்குடியேற்றம் தொடர்பான தெளிவான அறிக்கையைத் தருமாறும் பணித்துள்ளது.

சட்டமா அதிபரின் பதில் நழுவல் போக்கைக்கொண்டதாகவும், நியாயத்தை மறைத்து அரசின் சார்பாக அரச நலனுக்கேற்ப கருத்தை முன்வைக்கும் முனைப்புடையதாகவே உள்ளது.

மக்களின் ஜனநாயக உரிமையை நிராகரித்து இராணுவ நலனைப் பாதுகாக்கும் நோக்குடன் முன்வைக்கப்படும் எந்தக் கருத்தும் சர்வாதிகாரப் போக்கின் வெளிப்பாடாகவே இருக்கும்.

அது இந்த நாட்டின் அமைதிநிலையை - சமாதான நிலையைச் சிதைக்கும் நோக்கத்தைக் கொண்டதாகவே கருதப்படும் என்பதையும் இலங்கையின் ஆளும் வர்க்கம் புரிந்து கொள்ளவேண்டும்.

## நாடும் நடப்பும்




செய்தி:- ஜே.வி.பியுடனான கூட்டு நெருக்கடிகளில் இருந்து நாட்டைப் பாதுகாக்க உதவும்......
- சிறிலங்கா சுதந்திரக் கட்சி

# லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டின்பேரில் மரண விசாரணை அதிகாரி கைது!

## யாழ். நீதிமன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

இறப்பு அத்தாட்சிப் பத்திரத்தை வழங்குவதற்கு லஞ்சம் பெற்ற மரண விசாரணை அதிகாரியொருவரை, பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

மிருசுவில் கெற்பலி எனும் இடத்தைச் சேர்ந்த நாகராசா நகுலேஸ்வரன் என்பவர் கடந்த வருடம் மார்ச் மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டிருந்த சமயம் மரணமானார். இவரது மரண விசாரணைகளை மேற்கொண்ட அதிகாரி மரண அத்தாட்சிப் பத்திரத்தை வழங்குவதற்கு அவரது மனைவியிடம் இருந்து லஞ்சம் கேட்டுள்ளார்.

இதனால், முதலில் 1900 ரூபாவை லஞ்சமாக வழங் கியும் மரண அத்தாட்சிப் பத்திரத்தை வழங்காது இழுத் தடித் துள்ளார். இது தொடர்பாக மீண்டும் கேட்டபோது மேலும் 10,000 ரூபா பணம் தரும்படியும் அப்போதுதான் மரண அத் தாட்சிப் பத்திரத்தை வழங்க முடியுமெனவும் குறித்த அதிகாரி தெரிவித்திருந்தார்.

இதனை வழங்க மறுத்த குறித்த பெண் - இது தொடர்பாக, யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் துள்ளார். இவரது முறைப்பாட்டையடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மரண விசாரணை அதிகாரி நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதுதொடர்பான விசாரணைகளின்போது, மரணவிசாரணைகளுக்கோ அல்லது பிரேதப் பரிசோதனைகளுக்கோ பொதுமக்கள் எதுவித பணமும் யாருக்கும் செலுத்த வேண்டிய அவசியமில்லை. இதுதொடர்பான, விசாரணைகள் அனைத்தும் அரச செலவிலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த விசாரணைகளுக்காக பொதுமக்களிடம் இருந்து லஞ்சம் பெறுவது பாரதூரமான குற்றமாகும் எனத் தெரிவித்த நீதிபதி இ.த.விக்னராஜா - குறித்த மரண விசாரணை அதிகாரியை 25,000 ரூபா அரச ஊழியர்களின் ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் நேற்று நடைபெற்றன. (ச)

# பலாலி விமானத்தளத்தை இந்தியா புனரமைக்க கூடாது

## ஆதீனங்களூடாக இந்திய அரசிடம் மகேஸ்வரன் வேண்டுகோள்

பலாலி விமானப்படை தள ஓடுபாதையினை புனரமைக்கும் பணியில் இந்தியா ஈடுபடக்கூடாது. இதற்கான நிதி உதவியினையும் வழங்கக்கூடாது.

இந்தியாவின் இத்தகைய நடவடிக்கைகள் அதிபாது காப்பு வலயப் பகுதியில் மக்களை மீளக்குடியமர்த் துவதற்கு தடையாக அமைந்துவிடும் என்பதை, இந்து ஆதீனங்களுடாக இந்திய அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறப்போவதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழகத்துக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் - திருவாவடுதுறை ஆதீனம், தருமபுர ஆதீனம், திருப்பனந்தாள் ஆதீனங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த ஆதீன முதல்வர்களுடனான சந்திப்பின்போது இந்த விடயம் குறித்து எடுத்து விளக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்து ஆதீனங்களுடாக இந்த வேண்டுகோளை இந்திய அரசுக்கு விடுப்பதுடன், எதிர்காலத்தில் இந்திய தலைவர்களை சந்தித்தும் இவ்விடயம் குறித்து பேசவுள்ளதாகவும், பலாலி விமானதளத்தின் ஓடுபாதையினை இந்தியா புனரமைக்கக் கூடாது எனவும்,

இத்தகைய நடவடிக்கையினால் அதிபாதுகாப்பு வலய பகுதிகளில் மக்கள் மீளக்குடியேற முடியாதநிலை ஏற்படும். இதனைவிட பலாலி விமானத்தளத்தைப் பொது மக்களின் பாவனைக்கான விமானத்தளமாக மாற்ற வேண்டும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# உரும்பிராய் பாடசாலைக் காவலாளி சந்தேகத்தின் பேரில் மீளவும் கைது

உரும்பிராய் பாடசாலை மாணவியின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்றால் அண்மையில் விடுவிக்கப்பட்ட பாடசாலைக் காவலாளி சந்தேகத்தின் பேரில் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

உரும்பிராய் சந்திரோதயா பாடசாலை ஐந்தாமாண்டு மாணவியான எஸ்.துவாரகா கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் மர்மமான முறையிலே கொலை செய்யப்பட்டார். இவரது சடலம் பின் பாடசாலை கிணற்றினுள் இருந்து மீட்கபபட்டது. இது தொடர்பாக பாடசாலைக் காவலாளியான தில்லையம்பலம் ரமணன் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டிருந்தார்.

யாழ்.சிறைச்சாலையில் நீண்ட காலமாக தடுத்து வைக் கப்பட்டிருந்த இவர், நீதிமன்ற விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார். இந்தநிலையில் இவர் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டிருந்தார்,

ஆனாலும், இது தொடர்பான விசாரணைகளை யாழ். நீதிவான் நீதிமன்றம் தொடர்ந்து மேற்கொண்டு வந்தது. இந்த நிலையில் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரம் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நேரடியாக பல தடவைகள் சென்று விசாரணைகளை மேற்கொண்டதோடு சாட்சியங்களின் வாக்கு மூலங்களையும் பதிவு செய்திருந்தார்.

இந்த நிலையிலேயே போதிய ஆதாரங்கள் இருப் பதாகத் தெரிவித்து விடுதலை செய்யப்பட்ட இளைஞரை, மீண்டும் பொலிஸார் கைது செய்து, நீதிமன்றம் மூலம் விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக வழக்கு விசாரணைகள் எதிர் வரும 12ஆம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட நீதிமன்ற வட்டராங்கள் தெரிவித்துள்ளன. (ச)



# காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

# மஹா கும்பாபிஷேகச் சிறப்புமலர்



## (நாளை ஞாயிற்றுக்கிழமை - 01.02.2004)



திருவளர், அருள் நிறை, சிவபூமியின் ஏழிசை புகழ், யாழிசை மண்ணின், வெற்றியின் மங்களத திலகமென நெற்றியில் நிகழ்வதாய் அமைந்துள்ளது காரைநகர். இங்கு அறநெறியும், தவநெறியும், ஒருங்கே அமையப்பெற்று, செந்தமிழும் சிவநெறியும் சீரோங்க, கற்றோரும், மறறோரும், வாழ்வாங்கு வாழும் வழிமுறைகளைப் பேணி வாழ்ந்து வரும் பயனாக, வரலாற்றுச் சிறப்புமிக்க சைவ ஆலயங்கள் பல அமையப் பெற்று , இவ்வூரை அணிசெய்து திகழ்கின்றன. இந்த வகையில் இவ்வூரின் மேற்கு திசையில் வாரிவளவு எனும் புண்ணியபதியில் ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமான கோரயில் கொண்டு எழுந்தருளியுள்ளார். வணங்கிடும் அடியவரை வாழ்த்தியே வரம் அருளும் தூக்கிய துதிக்கை, வந்தவினை பந்தத்தின் வாட்டத்தை ஓட்டி விடும். தேட்டமிகு செவிகள், பரபொருள் வதன மதில் அமைந்ததைப்போலவே, பார்த்திடும் விழிகளுடன் ஐங்கரததையுடைய ஸ்ரீ கற்பக விநாயகனை - திரிகரண சுத்தியோடு வழிபடும் அடியவர்களுக்குப் பிரணவ ஒளிப்பொருளான வற்றாத கருணையினை வாரி வழங்கும் பெருமானாக இவ்வாலயத்தில் காட்சி தருகின்றார். இவ் ஆலயம் 1980 ஆம் ஆண்டில் சுப்புடையார் பரம்பரையினால் மண்கோவிலாக அமைக்கப் பெற்று, அவர்கள் வழித்தோன்றலாகிய இராமநாதர், தம்பையா ஆகியோர்களின் காலங்களில் சுண்ணாம்புக் கட்டடங்கள் கொண்டு புதுப்பொலிவு பெற்றன. தம்பையா அவர்களின் பின்னர் அவரின் புதல்வர் அமரர் கணேசபிள்ளை 1967 ஆம் ஆண்டு அமரத்துவம் அடையும்வரை தனது மூத்தசகோதரர் அமரர் சுப்பிரமணியம் அவர்களின் உதவியுடன் பராமரித்துவரும் காலத்தில் சீமெந்துக் கட்டடங்கள் அமையப்பெற்றன. அமரர் கணேசபிள்ளையின் பின்னர், அவர் மனைவியும், மூன்று பிள்ளைகளும் பராமரித்து வந்தார்கள். அன்னாரின் உடல்நலக்குறைவு காரணமாக 1972 ஆம் ஆண்டில மூன்று பேர் கொண்ட நிர்வாகசபையில் திருவாளரகள் ஈ.வி.கார்த்திகேசு, க.கணபதிப் பிள்ளை, சி.சிவஞானம் ஆகியோரை நியமித்து பொறுப்பினை ஒப்படைத்தார். முதல் இருவரும் தங்கள் பொறுப்பினை மற்றவரிடம் ஒப்படைத்து, தாங்கள் அமரத்துவம் அடையும்வரை இன்றைய நிர்வாகத்திற்கு பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

சித்திரை புத்தாண்டை இரதோற்சவமாகக் கொண்டு, 10 நாட்கள் மஹோற்சவம் சிறப்பாக இவ்வாலயத்தில் நடைபெற்று வருகிறது. அறங்காவலர் அமரர் தம்பையாவின் உறவினராகிய அமரர் சி.கந்தையாவினால் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட வீரபத்திர ஆச்சாரியார் தலைமையிலான குழுவினரால், மூன்று வருடங்களில் தேக்கு மரத்தினால் மிகவும சிறப்புமிக்க கலையம்சங்கள் பொருந்திய அழகிய தேரினை வடிவமைப்பித்து, 1926 ஆம் ஆண்டு வெள்ளோட்டத்தை நடாத்தினார். அவரின் பின் அவரது புதல்வன் சி.க.கணேசன்- இன்றுவரை தேரினை சிறப்பாகப் பராமரிப்பதுடன் தேர்த்திருவிழாவினையும் நடாத்திவருகிறார். திரு.சி.சிவஞானம் தலைமையிலான நிர்வாகம் சிறப்பாக இன்றுவரை சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. 1982 ஆம் ஆண்டில் பஞ்சதள இராஜகோபுரமும், மணி மண்டபமும் அமைக்கப்பட்டு, குடமுழுக்குப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவை. அந்த வகையில் தன்னை நாடிவரும் அடியார்களுக்கு வற்றாத கருணையினால் வாரிவழங்கும் ஸ்ரீ கற்பகவிநாயகரின் மெய்யன்பர்களின் பேருதவிகளின் பயனாகவும், எம்பெருமானது அருட்கடாச்சத்தினாலும் இன்று இவ்வாலயத்தில் நான்கு திசைகளிலும் இராஜ கோபுரங்களும், ஆலய உட்பிரகாரம், மணிமண்டபங்களாகவும் அமையப்பெற்று, காண்பதற்கு ஆயிரம் கண் வேண்டுமென அழகாகக் காட்சியளிக்கிறது. ஈழத்திருநாட்டில் நான்கு திசைகளிலும் இராஜகோபுரங்கள் அமையப்பெற்றுள்ளது இங்கு சிறப்பம்சமாகும். அனைத்து சிறப்புகளையும் தன்னகத்தேகொண்டு, விக்கினங்களைப் போக்கி, நல்வாழ்வையும் வளத்தையும் சதாசொரியும் காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் 01.02.2004 இல் நடைபெறும் மகாகும்பாபிஷேகப் பெருவிழாவில் சகலரும் வந்து கண்டு தரிசித்து இன்புற்று இஷ்ட சித்திகளைப் பெற்று பேரானந் தப் பெருவாழ்வு பெறுவோமாக.

## வாழ்த்துரை

சைவத்திருமுறைகளில் விநாயகர் பல இடங்களில் பேசப்படுகிறார். அவருக்கெனறே தனிப்பாக்கள் பதினோராம் திருமுறையில் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஒருபாடல் பின்வருமாறு.

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் -விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.**

வினையை வேரறுக்க வல்லவன் முழுமுதற்கடவுளாகவே இருக்கவேண்டும். அவன் வினைக்கு உட்படாதவன். இப்படியிருப்பவன் இறைவனைத்தவிர வேறு யாரும் இல்லை. 'வினையின் நீங்கி விளங்கிய அறிவன்' என்னும் தொல்காப்பியசூத்திரம் இறைவனையே சுட்டுகிறது. விநாயகன் என்ற சொல்லிற்கு- தனக்கு மேல் தலைவன் இல்லாதவன் என்பது கருத்து. இதுவும் விநாயகன் முழுமுதற்பொருள் என்பதை நமக்கு அறிவுறுத்தும். மேலே கண்ட திருப்பாடல் வாயிலாக விநாயகர் முழுமுதற்பொருள் என்பதைத் திருமுறையும் தெள்ளத்தெளிய விளக்குகிறது. விநாயகர் சிவனின் வேறல்லர் என்பது அருளாளர்களின் முடிபு. எனவே சிவ வணக்கத்துக்கும், விநாயகர் வணக்கத்துக்கும் வேறுபாடு இல்லை என்பது தெளிவு.

விநாயகர் வழிபாடு மிகத் தொன்மையானது. அசோகனின் புதல்வியாகிய சங்கமித்திரை என்பவள் விநாயகரின் திருவுருவம் ஒன்றை கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் நேபாள நாட்டுக்கு எடுத்துச்சென்றனள் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் அமராவதிச் சிற்பங்களுள் விநாயகர் திருவுருவமும் காணப்படுகின்றதென ஜெ.பர்கெஸ்(J.BURGESS) என்னும் அறிஞர் குறிப்பிடுகின்றார்.

விநாயகர் வழிபாடு இலங்கை, இந்தியாவில் மட்டுமன்றிச் சுமாத்திரா, ஜாவா, போர்னியோ, கம்போடியா, பர்மா முத லான வேறு நாடுகளிலும் பரவியிருக்கிறது.

காரைநகரிலுள்ள மிகப் பழைய ஆலயங்களுள் வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலயமும் ஒன்றாகும். முன்னோர் நமக்கு விட்டுச்சென்ற இந்த ஆலயத்தைப் பேணிப் பாதுகாத்து, நமது பிற்சந்ததியினரிடம் ஒப்படைப்பது நமது கடமையாகின்றது. இந்த நிலையில் ஆலயத் திருப்பணியைத் தகுதியும திறனும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற பெரியார் திரு.சி.சிவஞானம் அவர்கள் ஏற்றுக் கொண்டு, மெயவருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது தமது முழுநேரத்தையும் இந்தத் தெய்வப்பணிக்கு அர்ப்பணித்து, யாவரும் வியக்க வெற்றிவாகை சூடிக் கொண்டார். இப்பெரியாரும், திருப்பணிக் குழுவினரும் இச்சீரிய பணியிற் கலந்து கொண்ட ஏனையோரும், பொருளாலும் உழைப்பாலும் ஆதரவளித்த அன்பர்களும் விநாயகப் பெருமான் இன்னருளால் என்றும் இன்பம் பெருக நீடுழி வாழ்வார்களாக. ஆலய மகாகும்பாபிஷேகம் அண்மையில நிகழவிருப்பதும், கும்பாபிஷேகத்தின் நினைவாக மலர் ஒன்று வெளிவரவிருப்பதும் மட்டற்றமகிழ்ச்சியை உண்டாக்குகின்றன. கும்பாபிஷேகம் சிறப்பாக நிகழவும மலர் பக்திச்சுவை நனிசொட்டச சொட்ட சைவமணம் பரப்பும் கற்பக மலராக அமையவும் என் வாழ்த்துக்கள்.

**சிவஸ்ரீ.க.வைத்தீசுவரக்குருக்கள்**
**காரைநகர் - ஈழத்துச்சிதம்பரம்.**

## ஆசியுரை

சைவமும், தமிழும் சிறப்புற்று விளங்கும் காரைநகரில் வாரிவளவு எனும் திருத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளி, வேண்டுவார் வேண்டுவனவற்றை வாரிவழங்கும் ஸ்ரீகற்பக விநாயகரது தேவஸ்தானத்தில் ஆலய அறங்காவலரது பக்தியின் வெளிப்பாடாக அனைவரது உள்ளங்களையும் கவரக்கூடிய அற்புதமான திருப்பணிகள் நிறைவேறி, எம்பெருமானுக்கு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ உத்தம மகாயாக மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதைக் காணும்பேறு அடியவர்களுக்கு கிட்டியுள்ளமை அவர்தம் தவப்பயனே அன்றி வேறில்லை. பிரணவப்பொருளாகிய ஐங்கரனை வழிபடுபவர்கள் சகல இடர்களும் நீங்கி நற்பேறு பெறுவர்.

திருப்பணி செய்வார்க்குஞ் சிவனையுன்னிச் செம்பொன்
விருப்புடனீ வார் பெறுக வீடு.

என்ற சைவசமய நெறியின் வழியில் தேவஸ்தான நிர்வாகத்தினரது அரிய முயற்சியினால் தென்னகத்திலிருந்து வருகை தந்துள்ள சிற்பக் கலைஞரது கைவண்ணத்தில் ஆலயத்தின் நான்கு புறமும் எழிலுடன் வானுயர விளங்கி, ஆலயப்பண்பாட்டிற்குப் பெருமை சேர்க்கும் தூலலிங்கமாகிய கோபுரங்களுக்கும், கருவறையின் மீது மிகச்சிறப்புடன் இரட்டைப்பஞ்சாங்க அமைப்பில் அமைக்கப்பட்டுள்ள சுந்தரவிமானத்திற்கும், விநாயகப்பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் நடைபெறும் இக்கும்பாபிஷேகம் - பக்தியின் வெளிப்பாடாக அமைந்து எம்பெருமானின் திருவருட் பேறும் கும்பாபிஷேக நற்பலனும் எங்கும் பரவி, நாட்டுக்கு நற்பலன் சேர்க்க இருப்பதையிட்டு நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

எம்பெருமானின் பல்வேறு தெய்வீக அருட் கோலங்கள் இவ்வாலய மண்டபங்களில் கலையெழிலுடன் காட்சி தருகின்றன. மிகநுட்பமான கலை அம்சங்களுடன் அமைக்கப்பட்டுள்ள பிரதான யாகசாலையில் கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறுவதைக்காணும்பேறு, காரைநகர் வாழ் சைவப் பெருமக்களுக்கும், ஏனையோருக்கும் கிட்டியுள்ளது. பெருமளவிலான நிதிச் செலவில் திருப்பணிகள் நிறைவேறி, புதுப்பொலிவுடன் விளங்கும் இவ்வாலயம், எம்பெருமானுக்குத் திரிகரண சுத்தியுடன் பக்தியின் சின்னமாக அர்ப்பணிக்கப்படுவதோடு, எமது பண்பாட்டிற்குப் பெருமை சேர்ப்பதையிட்டும் பெருமிதம் அடைகின்றோம்.

இவ்வாலயத் திருப்பணியில் தம்மை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்திக்கொண்ட தேவஸ்தான நிர்வாகத்தினருக்கும், ஆலயத்தை திறம்பட நிர்மாணித்த சிற்பக் கலைஞர்களுக்கும், திருப்பணிகளுக்குப் பல்வேறு வழிகளில் உதவிய விநாயக அடியார்களுக்கும், கும்பாபிஷேகக் கைங்கரியத்தை நிறைவேற்றும் சிவாச்சாரியார்களுக்கும் மற்றும் ஏனைய அடியார்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீகற்பக விநாயகரது கிருபா கடாட்சம் பொலிக என வாழ்த்துவதில் மிக்கமகிழ்ச்சியடைகின்றோம். இக்கும்பாபிஷேகத்தின் உத்தம பலனாக எங்கும் சாந்தியும், சமாதானமும் மேலோங்குவதாகுக. மகாகும்பாபிஷேகத்தை தொடர்ந்து எம்பெருமானுக்கு நித்திய நைமித்தியங்கள் சிறப்புற நடைபெற எம்பெருமானின் திருவருள் பொலிவதாகுக.

**பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
இந்து நாகரிகப் பேராசிரியர் - கலைப்பீடாதிபதி
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## வாரிவளவுப் பிள்ளையார் வாரிவழங்குவார்



திருமூலரால் சிவபூமி என வாழ்த்தப்பட்ட எங்கள் தெய்வத் திருநாடு - ஆன்மீகநெறியில் நிறைந்து, ஆலய தரிசனங்களின் கோபுரக் கலசமாக அறவாழ்வை ஆரோகணம் செய்கின்றது. பூக்களின் இதழ்களில் தவழும் தேன் நதியான காரைநகர் மண், சிவபுண்ணியர்களினால் ஞானபூமியாக ஆலாபரனை செய்யப்படுகிறது. இங்கே ஆலயங்களும், கோபுரங்களும் சமுத்திரத் தாலாட்டில் தெய்வமொழிகளை வைரக்கற்களாகக் கொட்டுகின்றன. வேண்டுதல் வேண்டும் நெறியாளர்கள் வேண்டியதை அடைகின்றார்கள்.

அந்த வகையில் காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகர் தேவஸ்தானம் புதிய நான்கு கோபுரங்களுடன் அள்ளிக்கொடுக்கும் பிள்ளையாரின் உள்ளத்து ஒளியை மக்களுக்கு ஊட்டுகின்றது. கற்பகவிநாயகன்- ஔவைக்கு அருள்கொடுத்தார். உலகம் முழுமையும் பிள்ளைகளுக்குக் கல்வி கொடுத்தார். மனுக் குலத்தின் வினைகளை அழித்து, நாயகனாய் நடனம் ஆடுகிறார்.

ஆனைமுகத்தானை காதலால் கூப்பும் கரங்கள் உலகில் எங்கு வாழ்ந்தாலும், ஞான வாக்கிலும் செய்யும் கருமங்களிலும் வெற்றிகள் குவிப்பர். நாம் உலகப்பந்தில் எங்கு வாழ்ந்தாலும், பிறந்த பூமியின் பிள்ளையாரின் மல்லிகைச் சிரிப்புத்தான் மகோன்னத வாழ்வை நெய்கின்றது.

திருவருளும், திருமுறையும் சாமரை வீசிட, தாமரை முகத்தோடு கற்பகப் பிள்ளையார் ஆலய நான்கு கோபுரங்களை அமைத்த வள்ளல்கள், சிற்பிகள், ஓவியர்கள், மகாகும்பாபிஷேகம் நடத்தும் குருக்கள்மார், கொடியாகிபபடர்ந்த பிள்ளயையாரைத் தரிசிக்கும் தமிழ் நெஞ்சங்கள், ஆலய நிர்வாகிகள் முத்தமிழ் விநாயகனின் முத்துப்பந்தலுக்குள் நித்தமும் அருள்வாசம் சுவாசிப்பார்கள்

**வாரி வளவு கற்பகப் பிள்ளையார்**
**வாரி வழங்க நாளும் வணங்குவோம்.**
**சீரிளமை குன்றாத செந்தமிழ் பிள்ளையார்**
**காரைநகரை வாழ்த்திட நாளும் வணங்குவோம்.**

**ப.விக்னேஸ்வரன்.**
**வலயக்கல்விப் பணிப்பாளர்.**
**யாழ்ப்பாணம்.**

## ஆலயநிர்வாக உள்ளத்திலிருந்து...

"கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது பெரியோர் வாக்கு. ஆனால், குடிகள் இல்லாத ஊரில் கோவில்கள் ஏன் என்று சிலர் கேட்கின்றார்கள். ஆண்டவன் எம்மிடம் அடைக்கலமாகத் தந்த பொருளை, எமது பொருளென்று கூறும் சிலர் தான், மேற்கூறிய கூற்றினை இன்றும் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், வாரிவளவான் வாரி,வாரி வழங்கிய பொருளை அள்ளிக்கொடுத்த பெரும் வள்ளல்களின் உதவியினாலும், பணத்தை கொடுக்க வசதியில்லாதவர்கள் கொடுத்த ஆதரவினாலும், சரீர உழைப்பினாலும் இன்று பாரிய திருப்பணியைச் செய்து, மஹா கும்பாவிஷேகத்தைக் கண்டுகளிக்கும் பெரும்பேறு பெற்றவர்கள் நாம். இதற்காக எமக்கு வேண்டிய ஆலோசனைகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்கிய அனைவரையும் மனதார வாழ்த்தி, வருங்கால சந்ததிக்கு இவ் ஆலயத்தை ஒரு கலைக்கோயிலாக நாம அற்பணிக்கின்றோம்.

**- ஆலய நிர்வாகஸ்தர்.**

விளம்பர அனுசரணை:

கும்பாபிஷேகம் காணும் பெருமானின் அருள்பெற பிரார்த்திக்கின்றோம்
கனகா வீடியோ அன் ஸ்ரூடியோ
வீடியோ, ஸ்டில், கறுப்பு வெள்ளை படிப்பிடிப்பாளர்கள்,
ஆலடி, காரைநகர். (சி-2189) கிளை: வலந்தலை, காரைநகர்.

நாட்டில் சாந்தி, சமாதானம், அமைதி நிலவ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
லிங்கம் தொலைத்தொடர்பு & பந்தல் சேவை
ஆலடி. வலந்தலை.
060 - 2213061 021 - 2225281, 0712 -373441
(சி-2190)

# ஆப்கான் வெடிவிபத்தில் சிக்கி ஏழு அமெரிக்கப் படையினர் பலி!



ஆப்கானிஸ்தானில் ஆயுதங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த இடத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 7 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். மூவர் படுகாயமடைந்துள்ளனர். இந்த வெடிவிபத்து ஆப்கானிஸ்தான் தலைநகரின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள டெகிகெண்டு என்ற கிராமத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்த மாகாணத்தின் ஆளுனர் காஜி அசகுல்லாகான் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் - பாவனைக்கு உதவாத ஆயுதங்களை அழிக்கும் முயற்சியில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டவேளையில் இந்த வெடிவிபத்து நிகழ்ந்துள்ளதாகவும் இதற்கும் தலிபான் போராளிகளுக்கும் எந்தவித தொடர்புமில்லை எனவும் தெரிவித்தார்.

இந்த வெடி விபத்து தற்செயலாக நடந்துள்ளதா அல்லது திட்டமிட்டு நடத்தப்பட்டதா என்பதை அறிந்து கொள்ளும் முயற்சியில் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

வெடிவிபத்து இடம்பெற்ற பின் அமெரிக்கப் படை வீரர் ஒருவர் காணாமற் போயுள்ளார். ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பு நடைபெற்று 2 ஆண்டுகளின் பின்பும் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெறுகின்றன. இந்த மாதத்தில் மட்டும் 80 பேர் வரையில் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் ஆப்கானிஸ்தான் மக்கள், போராளிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சர்வதேச அமைதிப் படையினரும் அமெரிக்கர்களும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எல்லைப்புற நகரத்தினுள் சூடான் படைகள் முன்னேறின

## ஒருலட்சம் மக்கள் இடம்பெயர்வு



சூடான் இராணுவத்தினர் எல்லைப்புற நகரங்களைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து ஒருலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

சூடானின் மேற்குப்புற மாகாணமான டர்பூரின் - ரின் நகரை அரசுப்படைகள் கைப்பற்றியதையடுத்தே, அங்கிருந்து மக்கள் வெளியேறியுள்ளனர். இவர்கள் எல்லைகளைக் கடந்து காட் நகரினுள் பிரவேசித்திருப்பதாகவும், இதனால் மனிதாபிமான நெருக்கடி தோன்றியிருப்பதாகவும் தொண்டர் நிறுவனங்கள் தெரிவித்தன.

சாட்டில் சூடானியப் படைகள் நடத்திய குண்டுத்தாக்குதலில் நேற்றுமுன்தினம் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 15 பேர் காயமுற்றனர். சாட்டில் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது இதுவே முதற் தடவை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக நோக்கு

# இந்தியாவின் குளிர்பானங்களில் பூச்சிமருந்து இருப்பது உண்மை!

## நாடாளுமன்றக்குழு கண்டறிந்தது

கொக்ககோலா, பெப்சி குளிர்பானங்களில் பூச்சி மருந்து இருப்பது உண்மை என ஆய்வு நடத்திய இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கொக்ககோலா, பெப்சி உட்பட குளிர் பானங்களில் ஆபத்தான பூச்சி மருந்து கலந்து இருப்பதாக புகார் பெறப்பட்டதைத் தொடர்ந்து பெரும் பரபரப்பு உண்டானது.

அந்தக் குளிர்பானங்களைக் குடிப்பதை மக்கள் குறைத்து விட்டனர் அதனால் விற்பனை வீழ்ச்சியடைந்துவிட்டது என்று இந்திய வர்த்தகர்கள் கூறுகிறார்கள்.

அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத்பவார் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அந்தக்குழு சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தி ஒரு அறிக்கை தயாரித்து உள்ளது. அது எதிர்வரும் 5 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்.

இந்தக் குழுவில் இடம்பெற்ற சிவசேனை நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்சய் நிருபம் நிருபர்களிடம் கூறியதாவது-

விஞ்ஞான மற்றும் சூழல் மையம் நடத்திய பரிசோதனைகளில் குளிர்பானங்களில் ஆபத்தான பூச்சி மருந்து கலந்து இருப்பதைக் கண்டோம்.

வளர்ந்த நாடுகளில் தயாரித்து விற்கப்படும் கொக்ககோலா, பெப்சியைவிட இந்தியாவில் தயாரித்து விற்கப்படும் கொக்ககோலா, பெப்சி ஆகியவற்றில் அதிக பூச்சி மருந்து கலந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பாரபட்சத்தை அரசுக்குத் தெரிவிப் போம். பூச்சி மருந்தால் பாதிப்பைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சிபாரிசு செய்வோம். 'எங்கள் குளிர்பானத்தில் பூச்சி மருந்துக் கலப்படம் இல்லை' என்று விளம்பரம் செய்த கொக்ககோலா, நிறுவனம் மீது சுகாதார அமைச்சர் நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது. அப்படி விளம்பரம் செய்தது, உணவுக் கலப்படச் சட்டத்தை மீறிய செயலாகும்.

நிலத்தடி நீர் மீது பழிபோட்டுத் தப்பிக்க நினைக்கும் குளிர்பான நிறுவனங்கள் தப்பி விடக்கூடாது. இறுதியாக விற்பனைக்கு வரும் குளிர்பானம் உலக தரம் அளவில் இருக்க வேண்டும். அதற்கான பொறுப்பை அந்த நிறுவனங்களே ஏற்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டு இருக்கிறது. நாடாளுமன்றத் தேர்தல் நடக்க இருப்பதால இந்த அறிக்கை அவசரமாகத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.



மக்காவில் உள்ள பெரிய மசூதியில் 20 லட்சம் ஹஜ் புனித யாத்திரிகர்கள் குழுமியிருப்பதைப் படத்தில் காணலாம். நாளைமறுதினம் மதினாவில் சாத்தான்கள்மீது கல்லெறியும் நிகழ்விலும் இவர்கள் பங்கேற்கவுள்ளனர்

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள்; புலனாய்வுத் தகவல்களில் தவறு

## அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் தெரிவிப்பு



ஈராக்கில் பேரழிவு தரக்கூடிய ஆயுதங்கள் தொடர்பாக புலனாய்வுத் தகவல்களில் தவறுகள் காணப்படலாம் என வெள்ளைமாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான கொண்டலீசா றைஷ் சி.பி.எல்.தொலைக்காட்சிக்கு வழங்கிய செய்தியில் தெரிவித்தார்.

ஆனால், அதிபர் புஷ் இவ்வாறான ஆயுதங்கள் ஈராக்கில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக இதுவரை காலமும் தெரிவித்துவந்துள்ளார்.

அமெரிக்கப் படையினரால் ஈராக் கைப்பற்றப்பட்டு ஒன்பது மாதங்கள் கடந்த நிலையிலும், இதுவரை அவ்வகையான ஆயுதங்கள் எவையும் கைப்பற்றப்படவில்லை.

இதனிடையே, சென்றவாரம் ஈராக்கின் ஆயுதப்பரிசோதகர் டேவிட் கே தனது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்திருந்தார். இவர் தனது ராஜினாமாவுக்கான காரணத்தில் ஈராக்கின்மீதான அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு முனனர் அங்கு பேரழிவுதரும் ஆயுதங்கள் எதுவும் இருந்ததாகத் தான் அறியவில்லை எனவும் சுதந்திரமான விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும் எனவும் கேட்டிருந்தார். டேவிட் கேயின் மேற்குறிப்பிடப்பட்ட கருத்துக்குப் பதிலளிப்பதாகவே அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும்போது, தமக்குக் கிடைத்த சான்றுகளுக்கும், உண்மைகளுக்கும் இடையில் பாரிய மாறுதல்கள் காணப்படுவதாலும் சுதந்திரமான விசாரணை ஒன்றுக்கு தயாராக இல்லை எனவும் தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஈராக்கியத் தலைவர் சதாம் ஹுசைன் உலகின் பயங்கரமான பிரதேசத்தில் ஆட்சிசெய்த பயங்கரமான ஒரு மனிதன் எனவும், சதாமின் அச்சுறுத்தல்களுக்கு பரிகாரம் காண்பது அவசியமானதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரிட்டனின் வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்தார் அத்வானி



சட்டவிரோதமாக ஆயுதங்களைக் கடத்திய குற்றத்துக்காக, இந்தியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட பிரித்தானியப் பிரஜையான பீட்டர் பிளீச் விடுதலை செய்யப்படவுள்ளதாக இந்திய துணைப் பிரதமர் அத்வானி தெரிவித்தார்.

ரஷ்யாவின் லற்வியாவைச் சேர்ந்த ஐவருடன் இணைந்து துப்பாக்கிகள், றொக்கட், எறிகணைகள், கிரனைட்டுகள் ஆகியவற்றை சரக்கு விமானம் ஒன்றிலிருந்து மேறகு வங்காளத்தின் புருலியா மாவட்டத்தில் விமானத்திலிருந்து தரையிறக்க முறபட்டவேளையில் பீட்டர் பிளீச் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நீதிமன்ற விசாரணையின் பின் இந்தியாவுக்கு எதிராகப் போரிட முயற்சித்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டு இவருக்கு ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ரஷ்ய ஜனாதிபதி புடினின் தலையீட்டினால் லற்விய பிரஜைகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தனர்.

ஆனாலும், இந்தச்சதி முயற்சியை முன்னின்று நடத்திய டென்மார்க்கைச்சேர்ந்த நியல் கிரிஸ்ரியன் நியங்சன் இதுவரை கைதுசெய்யப்படவில்லை 1995 ஆம் ஆண்டு முதல் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுவரும் இவரை விடுவிக்குமாறு பிரிட்டன் - இந்தியாவிடம் தொடர்ச்சியாகக் கோரிவருவது குறிப்பிடத்தக்கது.



லிபிய அனுசக்திக் கூடமொன்றை அதிகாரிகள் படம்பிடிப்பதைப் படத்தில் காணலாம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சர்வதேச நிபுணர்குழு வரவில்லை பொது அமைப்புக்கள் ஏமாற்றம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவில போர் நடைபெற்ற காலத்தில் படையினரால் கைதாகி சித்திரவதைக்கு உட்பட்டோரின் நிலைகுறித்து ஆராய்வதற்காக, நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருவதாகத் தெரிவித்த சர்வதேச நிபுணர்குழு, அறிவித்தபடி நேற்று யாழ்ப்பாணம் வரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக்குழுவினைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாண மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தில் ஒன்றுகூடிய பாதிக்கப்பட்டோரின் உறவினர்கள் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டோரின் சர்வதேச புனர்வாழ்வுச் சபை என்ற இந்த அமைப்பின் உயா மட்ட அதிகாரிகளே நேற்று யாழ்ப்பாணம் வருவதாக அறிவித்தல் ஏற்கனவே கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

# கிரிக்கெட் சபைத் தலைவருக்கு பெப் 10 வரை விளக்க மறியல்

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவை எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில வைக்குமாறு கொழும்பு மஜிஸ்ரேட் நீதிவான் உத்தரவிட்டார்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் சுமதிபால, அம்புலன்ஸ் வண்டி மூலம் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டார்.

திலங்க சுமதிபாலவுக்கு எதிராக பல்வேறு விடயங்களும், சாட்சிகளும் இருப்பதால் - குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் நிதிமன்றத்தில் அவருக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் நேற்று வாசித்துக் காட்டப்பட்டது.

தம்மிக அமரசிங்கவுக்கு சட்ட விரோத கடவுச்சீட்டு பெற்றுக் கொடுப்பதற்கு நிதியுதவி வழங்கப்பட்டமை தொடர்பாக, திலங்க சுமதி பாலவுக்கு எதிராக முக்கிய குற்றச்சாட்டும் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டது. இதற்குப்பதிலளித்த திலங்க சுமதிபால தான் குற்றவாளி அல்ல என நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

## மன்னார்...

மனனார் மாவட்ட நீதிபதி, முருங்கன் பொலிஸார், மன்னார் மாவட்ட கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

தற்போது, சடலம் அநுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாவட்ட வைத்திய அதிகாரி பிரேத பரிசோதனைகளை மேற்கொண்டு வருகின்றார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார், விலாச்சி பிரதேச பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**மஹஜன சம்பத பெறுபேறுகள்**

சீட்டிழுப்பு இல: 1586 திகதி: 30.01.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| H | 8 | 2 | 9 | 3 | 8 | 0 |

**நடிகர், நடிகைகள் தேவை**

வெகு விரைவில் யாழ். மண்ணில் தயாரிக்கப்பட விருக்கும் சின்னத்திரைக்கு நடிப்புத் திறமையும், ஆவலும் கொண்ட நடிகர், நடிகைகள் தேவை. அண்மையில் எடுத்த மூன்று புகைப்படங்களுடன் மற்றும் நற்சாட்சி ஆவணங்களுடன் நேரில் சமுகந்தரவும்.

காலம் : 02.02.2004 திங்கட்கிழமை

நேரம் : காலை 9.00 மணி

இடம் : ஜெசித்தாரா கட்டிடம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் - ஒழுங்கை
சுண்டுக்குளி.

(611)

# மூன்று அமைச்சுகள் மீதான நடவடிக்கை ஜனாதிபதியின் முட்டாள் தனமான முடிவாகும்!

## வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

(புதுடெல்லி)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான அரசியலமைப்பு நெருக்கடிக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று, வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ ஊடகவியலாளர்களுக்கு கருத்து வெளியிடுகையில் -

கடந்த நவம்பர் மாதம் முதல் அமைச்சர்கள் மீது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்த நடவடிக்கையானது முட்டாள்தனமான முடிவாகும்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக தொடரும் அரசியல் நெருக்கடிக் காலத்தில் புலிகள் மிக[illegible] நல்ல பையன்களாக நடந்துகொ[illegible]ருக்கிறார்கள் நாம் அதை மிக[illegible] வரவேற்கின்றோம். தென்பகு[illegible] நிலைமை குறித்து மிகவும் [illegible] பூர்வமாக புலிகள் புரிந்துகொ[illegible]கள் என்று நம்புகினறோம் என் அவர் மேலும் குறிப்பிட்டார்

## ஜெனரல்...

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முதலாவது தலைவராக 2002 மார்ச் 2ம் திகதி முதல் 2003 மார்ச் 6ம் திகதிவரை மேஜர் ஜெனரல் புறுவ் ஹொவ்டோ பணியாற்றினார்.

இவரை மீண்டும்கண்காணிப்புக் குழுவின் தலைவராக நோர்வே அரசு நியமித்திருக்கிறது. இவர் கடந்த சில வாரங்களாக கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுடன் தொலைபேசி மூலமாகவும் ஈமெயில் மூலமாகவும் தொடர்புகளை ஏற்படுத்தினார் என தகவல்கள் வெளியாகின.

## விமானப்படை...

தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து கொலையாளிகள் தப்பிச் சென்று விட்டதாகவும், சந்தேக நபர்களைத்தேடிப் பொலிஸார் தேடுதல் ஆரம்பித்திருப்பதாகவும் கிருலப்பனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்குவாட்ரன் லீடர் ஹேரத் - இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் இற்கு கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு விசாரணைகளில் தொடர்புபட்டவர் எனத்தெரியவருகிறது.

இவர் உயர் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னரே இச்சம்பவம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## இராணுவ...

காகவே செய்துகொள்ளப்பட்டது.

இந்த உடன்படிக்கையில் ரஷ்யாவிலுள்ள இராணுவக்கல்வி நிறுவனங்களில் இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு தொழில்கள், பயிற்சிகளை வழங்குதல் தொடர்பான விடயங்களும் உள்ளடங்கியிருப்பதாக ரஷ்யதூதரகம் தெரிவித்தது.

ரஷ்யாவின் சார்பில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும், வெளிநாடுகளுடனான இராணுவ, தொழில்நுட்ப கூட்டுறவுக்கான ரஷ்ய அரசாங்கக் குழுவின் தலைவருமான மிக்கெய்ஸ மித்ரீவ்வும், இலங்கையின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் விசேட அழைப்பின் பேரில் கொழும்பு வந்த ரஷ்ய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் மிக்கெய்ஸ் மித்ரீவ முப்படைத் தளபதிகளுடன் பேச்சுக்களை நடத்தியதாகவும், ரஷ்ய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பாடசாலைக்குள் அத்துமீறிய இளைஞன் கைதானார்!

வேம்படி மகளிர் கல்லூரிக்குள் அத்துமீறி நுழைந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று மதியம் பாடசாலை நடைபெற்றுக்கொண்டிருந்த போது இந்த இளைஞர் பாடசாலை வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்துள்ளார்.

தான் கோப்பாய் பொலிசில் வேலை செய்வதாகவும், மாணவிகளை விசாரணைக்கு உட்படுத்த வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அதிபர் யாழ். பொலிஸாருக்கு உடனடியாக தெரியப்படுத்தியதை அடுத்து அங்கு வந்த பொலிஸார் சம்பந்தப்பட்[illegible] இளைஞரை கைது செய்து நீதிம[illegible]றில் ஆஜர்படுத்தினார்.

இவ் இளைஞரை எ[illegible] வரும் 13ஆம் திகதிவரை விளக்க[illegible] லில் வைக்குமாறு நீதி[illegible] இ.த.விக்னராஜா உத்தரவிட்[illegible]ளார்.

### இரு தமிழ் இளைஞர்கள் வெள்ளவத்தையில் கைது

(கொழும்பு)

இரண்டு புலிகள் இயக்க ச[illegible]தேக நபர்களை வெள்ளவத்தை [illegible] பல் லேனில் வைத்து கைது செ[illegible] திருப்பதாக பொலிஸார் தெரிவி[illegible]தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை [illegible] பல் லேனில் இரண்டு சந்தேக [illegible]கள் கைது செய்யப்பட்டதன் [illegible]யாகவே இந்த இரு இளைஞ[illegible] கைது செய்யப்பட்டனர் என [illegible]வத்தை பொலிஸ் நிலைய [illegible] பெக்ரர் நிமால் ரஞ்சித் தெரிவி[illegible]

## சுதந்திரக்கட்சி...

டார நாயக்கா போன்றோர், தமது சகோதரி சந்திரிகாவை முழுமையாக கலந்து ஆலோசிக்காமல் பதவி மோகத்தில் செய்து கொண்ட இத்தகைய கூட்டணியை தான் வன்மையாக கண்டிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## தேக்கமடைந்துள்ள சமாதான...

இவர்களுடன் ஐந்து கூட்டங்கள் நடைபெற்றன. இந்தச் சந்திப்புகளில் இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த தமிழ்ச்செல்வன், வடக்கு - கிழக்கின் நிலை தொடர்பாகவும் கொழும்பில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி போன்றவற்றையும் விளக்கினார்.

அத்துடன், சமாதான முயற்சிகள் மூலம் நாட்டிலுள்ள அனைத்து மக்களும் சமமாக நடத்தப்படவில்லை, தென்பகுதியிலுள்ள மக்கள் சமாதான முயற்சிகளினால் சலுகைகளை அனுபவிக்க வடக்கு-கிழக்கு பகுதிகளில் வாழும் மக்கள் தொடர்ந்தும் துன்பத்தையே அனுபவித்து வருகின்றார்கள். இதற்குக் காரணம் இப்பகுதிகளில் அசாதாரண சூழ்நிலையே நிலவிவருகின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி கடந்த இரண்டு தசாப்த காலமாக இலங்கையில் நடந்து வரும் போரை நிறுத்தி, மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய வகையில் நிலைமையை ஏற்படுத்துவதாகும்.

ஆனால், மக்களின் வாழ்க்கையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த இரண்டு வருடங்களில் துப்பாக்கிகளின் சத்தங்கள் மட்டுமே ஓய்ந்துள்ளதென அப்[illegible] மக்கள எண்ணுகின்றார்கள். அத[illegible] விட தமது வாழ்க்கையில் எதுவி[illegible] மாறுதலும் ஏற்படவில்லையென[illegible] துன்பகரமான வாழ்க்கை[illegible] தொடர்வதாகவும் நினைக்கின்ற[illegible]கள்.

எனவே, சர்வதேச சமூகம் வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழும் மக்களுக்கு அவசரமாகத் தேவைப்படும் மனிதாபிமான உதவிகளைச் செய்ய முன்வரவேண்டும் இதன்மூலம் அவர்களது அடிப்படை வாழ்க்கை முறையினை மாற்ற வேண்டும். சமாதான முயற்சிகளி[illegible] அவர்கள் நம்பிக்கை இழந்துவரு கின்றார்கள்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப் பட்ட விடயங்கள் எதனையும் து[illegible] திஷ்டவசமாக அரசாங்கம் நிறை வேற்றவில்லை. இதனால் தமிழ் மக்கள் விரக்தியும் அதிருப்தியு[illegible] அடைந்துள்ளனர்.

கொழும்பில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியையிட்டு தமிழ்மக்கள் மிகுந்த சந்தேகத்துடன் தான் பார்க்கிறார்கள். நாடு சுதந்திரம் அடைந்த காலம்முதல் வரலாற்று ரீதியாக நடந்துவரும் சம்பவங்களாலேயே தமிழ்மக்கள் சந்தேகததுடன் பார்க்கவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆளுங்கட்சி முயற்சி எடுக்கும்போது எதிர்க்கட்சி எதிர்ப்பது வழமையாகி விட்டது.

கொழும்பிலுள்ள அதிகாரப் போட்டி காரணமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களுக்காக உடனடி மனிதாபிமான உதவிகளை சர்வதேச சமூகம் நிறுத்தக்கூடாது.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் [illegible] 23.02.2002 ஆம் ஆண்டு புரிந்து[illegible]வு ஒப்பந்தம் ஏற்பட்டபோதும் இதுவரை அரசாங்கம் அந்த ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்தவில்லை.

அத்துடன் இந்த ஒப்பந்தத்தி[illegible] மூலம் பொதுமக்களின் குடியி[illegible]புக்கள், பாடசாலைகள், பொது கட்டடங்கள், வழிபாட்டு இடங்[illegible] போன்றவற்றிலுள்ள படையினர் வெ[illegible] மக்களின் இயல்புவாழ்க்கைக்[illegible] ஒத்துழைப்பதாகவும் தெரிவிக்[illegible]பட்டது.

அத்துடன், அகதிமுகாம்க[illegible] நலன்புரி நிலையங்களிலுள்ள மக்[illegible]ளும் தமது சொந்த இடங்களில் இ[illegible] வரை குடியமர்த்தப்படவில்லை என வும் அவர் தெரிவித்தார்.




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.